மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 6 ஜுன் / June 2020

"பிரகாசமான இளைஞர் சமுதாயத்தை உருவாக்குங்கள்"

செய்திப் பக்கம் - 2



கர்த்தாவே,

என் வாயின் வார்த்தைகளும்,

என் இருதயத்தின் தியானமும்,

உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக [சங். 19:14]

அட்டைப்படச் செய்தி:



**“பிரகாசமான இளைஞர் சமுதாயத்தை உருவாக்குங்கள்”**

**- கிறிஸ்தவ தலைவர்களுக்கு முன்னாள் குடியரசு தலைவர் (மறைந்த) ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆலோசனை.**

என் அன்புக்குரிய வாலிப ஊழியத் தலைவர்களே!

உங்கள் திருச்சபையில் உள்ள இளைஞர்களை நாளைய தூண்களாக அல்ல, இன்றைய தூண்களாகப் பாருங்கள். இந்த இளைய சமுதாயத்தைப் பாராமரிக்கும் உன்னதப் பொறுப்பை தேவன் உங்களை நம்பி உங்கள் கரத்தில் கொடுத்துள்ளார். **தேவன் ஒவ்வொரு வாலிபர்க்குள்ளும் ஒவ்வொரு தனித்துவத்தையும் அழைப்பையும் வைத்திருக்கிறார்.** இதை நீங்கள் புரிந்து கொண்டு அவர்களையும் மனரீதியாக புரிந்து கொள்ளச் செய்யுங்கள். இன்றைய இளைஞர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை, போதனை, பிரசங்கம் மாதிரியான வாழ்வு மூலமாக அவர்களுக்கு கற்றுக் கொடுத்து அவர்களை கிறிஸ்துவின் சீஷராக்குங்கள். மேலும் அவர்களின் உயர்ந்த நோக்கத்தை அறிந்து அவர்களில் ஒருவராக மாறி அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றப் அவர்களை ஊக்குவியுங்கள். இதை நீங்கள் செய்தால் உங்கள் ஆவிக்குரிய கண்களால் உள்ளும் புறமும் பூசப்பட்ட பிரகாசமான இளைஞர் சமுதாயத்தை நீங்கள் நிச்சயம் காண முடியும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பராக.

இப்படிக்கு, ஏ.பி.ஜே.அப்துல் கலாம்,

இந்தக் கடிதமானது பிரான்ஸ் தேசத்திலுள்ள திரு.ஜான் ஜெயகுமார் என்பவருக்கு 24.3.2010ல் அனுப்பப்பட்டதாகும்.

**வாசகர்கள் கவனத்திற்கு**

1. மார்ச் 24 முதல் மே 18 வரை கொரோனா வைரஸ், ஊரடங்கு காரணமாக மே மாத இதழ் தர இயலவில்லை. அசௌகரியத்திற்கு வருந்துகிறோம். ஜுன் மாதம் முதல் தொடர்ந்து கிடைக்கும்.

2. சந்தாதாரர்களில் சிலர் வருட சந்தா அனுப்புவதில் கரிசனையற்றவர்களாக இருக்கிறீர்கள். எனினும் உங்களுக்கு “தேவனுடைய வார்த்தை” அனுப்புவதில் எப்பொழுதும் கரிசனையுள்ளவர்களாகவே இருக்கிறோம். பத்திரிக்கை ஊழியத்தை கட்டாயமாக அல்ல, உற்சாகத்தோடு தாங்குங்கள். கீழ்க்கண்ட SBI வங்கி எண்ணைப் பயன்படுத்துங்கள், அல்லது 3-ஆம் பக்கத்திலுள்ள அலுவலக முகவரிக்கு M.O அனுப்பலாம்.

**K. SELWYN THANGADURAI, A/C No: 101697 87024**

SBI, Arasaradi Branch, Madurai - IFSC Code: SBIN0007482.

3. இந்த ஊழியத்தில் இணைந்து செயல்படும் அனைவருக்காகவும் இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர ஜெபிக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

- தொகுப்பாசிரியர்



**மலர் - 18 ஜுன் - 2020 இதழ் - 6**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. பாழாக்குகிற அருவருப்பு.... | 5 |
| 3. சீரழிந்து கொண்டிருக்கும்... | 13 |
| 4. புத்தியுள்ள ஆராதனைதானா? | 14 |
| 5. பாடம் புகட்டும் 'காக்லிபர்' விதை | 17 |
| 6. இயேசு - நிக்கொதேமு சந்திப்பு | 18 |
| 7. என்னை நோக்கிப் பாருங்கள் | 23 |
| 8. கிறிஸ்தியானின் மோட்சப் ... | 24 |
| 9. சமாதான சிந்தையே.... | 29 |
| 10. செய்திகள் .... | 13, 17 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

**வேர்டு ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
**D.No.23-B, "தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

## "நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்" (ஆதி.7:1)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்,

கொரோனா என்ற ஆட்கொல்லி நோயைக் குறித்து வேதாகமக் கண்ணோட்டத்தில் 2020 மார்ச், மற்றும் ஏப்ரல் மாத இதழ்களில் எழுதப்பட்டிருந்த செய்திகளை நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள்.

பழைய ஏற்பாட்டில், இராஜாக்கள் காலத்தில், ஆளுகிற இராஜாவோ அல்லது குடிமக்களோ தேவனை விட்டு விலகி அக்கிரமச் செயல்களில் ஈடுபடும்போது தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு எச்சரித்தும் அதற்கு செவி கொடாத போதெல்லாம் தேவன் அம்மக்களை கொள்ளைநோயால் வாதித்த சம்பவங்களைக் காண்கிறோம். ஆனால் உணர்வடைந்து தங்களைச் சீர்படுத்தித் திரும்பும் போது அவர்களுக்கு இரக்கம் பாராட்டி இருக்கிறார். ஆனால் அக்கிரமத்தின் பெருக்கம் எச்சரிக்கையையும் மீறி மிஞ்சிப்போகும் போது தாம் சிருஷ்டித்த முழு மனுக்குலத்தையும் பூமியிலிருந்து அற்றுப்போகத்தக்கதாக அழித்த பேரழிவையும் பின் சந்ததி அறிந்து கொள்ளும்படி வேதம் பதிவு செய்து வைத்திருக்கிறது. மனுஷருடைய அக்கிரமம் பூமியில் பெருகினது என்றும், அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று கண்டு பூமியை முற்றுமாக அழிக்கத் தீர்மானித்தார் என்று (ஆதி.6:5-7)ல்

காண்கிறோம். ஆனாலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மத்தியிலும் நோவா என்ற ஒரு நீதிமான் இருந்தான். அவன் **"தன் காலத்தில் இருந்தவர்களுக் குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ் சரித்துக் கொண்டிருந்தான்".** ஆகவே கர்த்தருடைய கண்களிலே கிருபை பெற்றவனாய் இருந்தான். (ஆதி.6:8,9)ல் அந்த நீதிமானையும் அவன் குடும்பத்தையும் ஜலப்பிரளயத்தால் வரவிருக்கும் அழிவுக்குத் தப்புவிக்க கரிசனை உள்ளவராக அவனைப் பேழையை உண்டு பண்ணச் சொன்னார். **நோவா "தேவ எச்சரிப்புப்பெற்று பயபக்தியுள்ளவனாகி, குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்"** என்று எபி.11:7ல் காண்கிறோம். நோவாவின் வயதைக்கொண்டு கணக்கிடும் போது (ஆதி.5:32,6:10,7:11) சுமார் நூறு ஆண்டுகளாக அந்தப் பேழையைக் கட்டி யிருக்கிறான். அக்காலக் கட்டத்தில் அவன் அக்கிரமத்திலும், அவபக்தியிலும் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்களுக்கு நீதியைப் பிரசங்கித்திருக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது (2பேது.2:5). ஆண்டவர் மனிதனைப் படைத்த 10ஆம் தலைமுறையிலேயே மக்களை அழித்திருக்கிறார்.

அந்த அழிவுக்கான தீர்மானம் அவரது இருதயத்தை விசனப்படுத்தியது (grieved His heart) என்று ஆதி.6:6ல் காண்கிறோம். அவர் துக்கத்தோடே உலகத்தை அழிப்பாரானால் அவருடைய நோக்கம்தான் என்ன? தேவ பக்தியுள்ள சந்ததி உருவாக்க வேண்டுமென்பதே அவரது திருநோக்கம் (மல்.2:15). அவருடைய திருநோக்கம் திசைமாறுகிறபோது பரிசுத்தத்தில் வைராக்கியமுள்ள தேவன் தாம் சிருஷ்டித்த மனுக்குலத்தை அழிக்கத் துணிகிறார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களின் அக்கிரமம்தான் என்ன? அதை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே **"நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண் கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப் போட்டது"** என்பதாக லூக்.17:26,27ல் கூறியுள்ளார். வேறுவிதமாகச் சொன் னால் புசிப்பதும், குடிப்பதும், பாலியல் ஒழுக்ககேடுகளும் (Sexual immoralty) நிறைந்திருந்தன. கானானியர்கள் பாகால் (Baal) என்று அழைக்கப்படுகிற ஒரு தெய்வத்தை வழிபட்டு வந்தார்கள். அது சாத்தானின் வழிபாடுதான். ஏனெனில் அதை வழிபடுகிறவர்களைக் குறித்து வேதம், அவர்கள் "இலச்சையான புணர்ச்சிக்காரர்கள்" (Sexual perverts) என்று (1 இராஜா.14:24)ல் வர்ணிக் கிறது. இன்று உலகம் முழுவதும் சகலவித ஆபாசங்களால் (Pornography) நிரம்பியிருக்கிறது. அதன் விளைவாக வயது, வரம்பினையும் பொருட்படுத்தாத கற்பழிப்புகள், அதைத் தொடர்ந்து கொலைகள், தற்கொலை நிகழ்வுகளை அன்றாட செய்திகள் ஆகிவிட்டன. ஆகவே **நோவாவின் காலத்தில் நடந்த**

- 12ஆம் பக்கம் பார்க்க...

# பாழாக்குகிற அருவருப்பும் 21ஆம் நூற்றாண்டின் திருச்சபையும்

இயேசு கிறிஸ்துவானவர், தானியேல் "பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத்...சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன், சிந்திக்கக்கடவன்" என்று (மத்.24:15)யில் சொல்கிறார். "பாழாக்கும் அருவருப்பு" என்பதைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டியது அவசியம். பாழாக்கும் அருவருப்பு என்றால் என்ன? முதலாவது இந்த கேள்விக்குப் பதிலைத் தெரிந்து கொள்வதற்கு முன்பாக எந்தச் சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து இதைச் சொன்னார் என்று நாம் சிந்திக்க வேண்டும். ஆண்டவரே, "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்று கேட்கும் போது ஆண்டவர் இந்தப் பதிலை சொல்கிறார் (மத்.24:3). அவர் நேரிடையாகப் பதிலைச் சொல்லாமல் சில அடையாளங்களைச் சுட்டிக்காட்டுகிறார். அதில் ஓர் அடையாளமாக பாழாக்கும் அருவருப்பைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள் என்றும் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் காண்பீர்கள் என்றும் குறிப்பிடுகிறார். பாழாக்கும் அருவருப்பு என்றால் எபிரேய மொழியில் **"ஷிக்கிட்ஸ் ஷாமிம்"** (Shiqquits Shamem) என்று சொல்லப்படுகிறது. இந்த வார்த்தையை விநோதமான வார்த்தையாக வேத வல்லுநர்கள் கருதுகிறார்கள். அந்தப் "பதம் பாகால் ஷாமிம்" என்ற வார்த்தை, ஆனால் அந்த நாட்களில் பாகால் தெய்வத்தை தங்கள் வாயினாலோ, எழுத்தினாலோ குறிக்கிற பழக்கம் அவர்களுக்கு இருந்ததில்லை. ஆகவே பாகால் என்ற வார்த்தையை மறைத்து "பாழாக்கும் அருவருப்பு" என்ற வார்த்தையை தானியேல் குறிப்பிடுகிறார். தானியேல் தீர்க்கதரிசி ஏறக்குறைய கி.மு.606 ஆண்டுகள் கிறிஸ்து வாழ்வதற்கு முன்பாக வாழ்ந்து தீர்க்கதரிசனம் உரைத்ததைக் காண்கிறோம்.

வேத வல்லுநர்கள் இயேசு கிறிஸ்து வருவதற்கு முன்பாகவே கி.மு.175ஆம் வருஷத்திலிருந்து கி.மு.164ஆம் வருஷம் வரை ஆண்ட ஆன்டியோகஸ் ஏபிபான்ஸ் என்ற செலுக்கஸ் மன்னன் எருசலேமை முற்றுகை போட்டு எருசலேம் தேவாலயத்தில் தங்கள் குலதெய்வத்தை நிறுத்தி அந்த ஆலயத்தை பரிசுத்தக் குலைச்சலாக்கி ஒரு பன்றியைப் பலி கொடுத்து அங்கே இருக்கிற அன்றாட பலியை நீக்கி அந்த ஆலயத்தை சர்வமும் பரிசுத்த குலைச்சலாக்கினான் என்று சரித்திரம் சொல்கிறது. இச்சம்பவங்கள் ஏற்கனவே நடந்து இருக்க இயேசுகிறிஸ்து தானியேல் தீர்க்கதரிசனங்களை நினைவு கூறுங்கள் என்று கூறுகிறார். உண்மையிலேயே அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறி முடிந்தது என்றால் ஏன் இயேசு கிறிஸ்துவானவர் அதே தீர்க்கதரிசனத்தை குறிப்பிட்டு

சிந்தித்து பாருங்கள் என்று சொல்லுகிறார்?. நடந்து முடிந்த அச்சம்பவம் தீர்க்க தரிசனத்தின் முன்னோட்டமேயல்லாமல் நிறைவு அல்ல. ஆகவே அது இனி நடக்கப் போகும் சம்பவமாகும்.

### எது தேவனுடைய ஆலயம்?

முதலாவது தேவனுடைய ஆலயத்தைக் குறித்தும் எருசலேம் தேவாலயத்தைக் குறித்தும் நாம் அறிந்து கொள்வது அவசியம். எருசலேம் தேவாலயம் முதன்முதல் ராஜாவாகிய சாலமோனால் கட்டப்பட்டது. அதற்குப் பின்பு கி.மு.586 ஆம் வருஷம் பாபிலோனிய படையெடுப்பால் சர்வமும் நிர்மூலமாக்கப்பட்டது, இடித்துத் தள்ளப்பட்டது. இரண்டாவது ஆலயம் கட்டப்பட்டதை எஸ்றா, நெகேமியா போன்ற புஸ்தகங்கள் விளக்குகின்றன. சுமார் 21 வருஷமாய் கட்டப்பட்டு கி.மு.516ஆம் வருஷம் முடிந்ததாய் சரித்திரம் சொல்கிறது. கி.பி.70ஆம் வருஷம் அந்த ஆலயம் டைட்டஸ் என்ற ரோம மன்னனால் நிர்மூலமாக்கப்பட்டது. இடித்து தள்ளப்பட்டது. ஆனால் நீங்களும் நானும் கவனிக்க வேண்டிய விஷயம் இம்முறை தேவாலயம் பரிசுத்தக் குலைச்சலாக்கப்படவில்லை. ஆனால் இடிக்கப்பட்டது. இந்நாள்வரை அதாவது 2020ஆம் வருஷம் வரை எருசலேமில் தேவாலயம் கட்டப்படவில்லை. ஆனால் **மூன்றாவது தேவாலயம் கட்டப்பட வேண்டும். திரும்ப அதில் பரிசுத்தக் குலைச்சல் உண்டாக வேண்டும் என்ற நிகழ்வுகள் நடைபெற வேண்டியுள்ளன**. இது நாம் சிந்திக்க வேண்டிய பகுதி.

### பாழாக்கும் அருவருப்பு என்றால் என்ன?

பாழாக்கும் அருவருப்பு என்றால் என்ன? அவைகளுக்கும் திருச்சபைக்கும் சம்பந்தம் என்ன? உண்மையில் அந்தப் பாழாக்கும் அருவருப்பு திருச்சபைகளில் உள்ளதா? வேதாகமத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். ‘‘மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது’’ (1யோவா.4:3). **‘‘அவன் எதிர்த்து நிற்கிறவனாயும் தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்....அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது. ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது’’** என்று அப்போஸ்தலனாகிய பவுல் 2 தெச.2: 4,7ல் குறிப்பிடுகிறார்.

அந்திக்கிறிஸ்துவின் ஆவி உலகத்தில் இருக்கிறது. உண்மையில் அந்திக்

கிறிஸ்துவின் ஆவி தேவனுடைய ஆலயத்தை அசுத்தம்பண்ணவும், பரிசுத்தக் குலைச்சலாக்கவும் எப்பொ முதும் முனைந்து கொண்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து வருவதற்கு முன் பாகவே அந்த அந்திக்கிறிஸ்து வின் ஆவி தேவாலயத்தை அசுத்தப்படுத் தினது. அதற்கு ஒரு ராஜாவை ஏற் படுத்தியது. பல நேரங்களில் தேவ பிள்ளைகளுக்கு விரோதமாய்ச் செயல்படுகிற ஆவியே அந்த அந்திக் கிறிஸ்துவின் ஆவி. அந்த ஆவியை நீங்கள் அறிந்து கொள்வது அவசியம். தற்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரத்தத்தின் மூலம் விலைகிரயம் கொண்டு வாங்கப்பட்ட சபை தேவ ஆலயத்துக்கு ஒப்பாயிருக் கிறது. ''நீங்கள் தேவனுடைய ஆலய மாயிருக்கிறீர்ளென்றும், தேவ னுடைய ஆவி உங்களில் வாசமா யிருக்கிறாரென்றும் அறியாதிருக் கிறீர்களா?'' என்று வேதம் சொல்லு கிறது (1 கொரி.3:16). ''எக்லிஷியா'' என்ற கிரேக்க மூல மொழிச்சொல் தேவனுடைய சபையைக் குறிப்ப தாகும்.அதாவது ''உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டது'' என்று பொருள்- அந்த அழைப்பு தேவ சபையின் அழைப்பு.

''எக்லிஷியா'' என்றால் அழைக்கப் படுதல். நாம் சபையாகக் கூடி வருகிற தேவசபை, தேவனுடைய ஆலயம் என்று காண்கிறோம். நாம் இணைந்து எங்கே இரண்டு மூன்று பேர் கூடியிருக்கிறோமோ அங்கே நான் இருக்கிறேன் என்று இயேசு கிறிஸ்துவானவர் திருவுளம்பற்று கிறார். ஆகவே நாம் இரண்டு மூன்று பேராய் கூடி ஜெபிக்கும் போது கூட சர்வ சங்க சபையாய் மாறுகிறோம். அங்கே பரிசுத்த ஆவி வருகிறார். பரிசுத்த ஆவியானவர் இன்று நமக்கு எச்சரிக்கையாக விடுக்கும் செய்தி என்ன? 21ஆம் நூற்றாண்டின் திருச் சபைகளிலே அந்திக்கிறிஸ்துவின் ஆவி எதைச் செய்ய விரும்புகிறது? அந்தப் பாழாக்கும் அருவருப்பை திருச்சபையில் கொண்டு வருவதற்கு திட்டமிட்டுச் செயல்படுகிறது. அதை அறிந்து ஜெபத்தின் மூலம் அதை மேற்கொள்ள வேண்டும். அதுவே இந்தச் செய்தியின் நோக்கமாகும். முதலாவது நாம் முன்பு கண்டது போல அந்திக்கிறிஸ்துவின் ஆவி இப்பொழுது கிரியை செய்கிறது. அக்கிரமத்தின் கிரியைகள் நடை பெறுகிறது. அவைகளின் முக்கிய வேலை என்னவென்றால் தேவ னென்னபடுவதெதுவோ ஆராதிக்கப் படுவதெதுவோ அதற்கு மேலாக தன்னை உயர்த்துவதும், தேவால யத்தில் தேவனைப் போல் காணப்படு வதும் முக்கிய அம்சமாகும். இந்தக் கிரியைகள் நம்முடைய திருச்சபை யில் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்ப்போம். தேவனுடைய ஆலயத் தில் தேவனே ஆராதனைக்குரிய வராக இருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

நீங்கள் வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் இயேசு கிறிஸ்துவானவர் 40 நாள்கள் உபவாசித்து அவர் ஜெபிக்கும் போது பிசாசு அவரை

வனாந்தரத்தில் சோதிக்க வருகிறான். பிசாசு அவரைப் பார்த்து நீ என்னைப் பணிந்து கொள் என்று சொல்லு கிறான். ஆம், எப்பொழுதுமே அவன் தேவனைப் போல் தன்னை உயர்த்தித் தொழுதுகொள்ள வேண்டும் என்று கேட்கிறான். அதற்கு இயேசு, “அப்பாலே போ சாத்தானே தேவன் ஒருவரையே பணிந்து கொண்டு, அவருக்கே ஆராதனை செய்வாயாக” என்று மத்.4:9,10ல் இயேசு சொல் கிறார்.

பிரியமானவர்களே, தெய்வத் திற்கு மேலாக தன்னை உயர்த்து கிறவன் பிசாசு. இன்று பல திருச்சபை களில் பல போதகர்களையும், பல சுவிசேஷர்களையும், பல தீர்க்கதரிசி களையும் காண்கிறோம். அவர்கள் ஜனங்களை தேவனிடத்தில் நடத்தா மல் தங்களிடத்திலே நடத்துகிறார்கள். அது அந்திக்கிறிஸ்துவின் ஆவி. எங்கெல்லாம் தேவனை முதன் மைப்படுத்தாமல் தன்னை முதன் மைப்படுத்தி தனக்கு ஆராதனை செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அங்கே திருச் சபை அருவருப்பாக மாறுகிறது. அங்கே அந்திக்கிறிஸ்துவின் ஆவி செயல்படுகிறது என்று அர்த்தம்.

வெவ்வேறு காலக்கட்டங்களில் அரசாங்கங்கள் வெவ்வேறு சட்டங் களை இயற்றினது குறித்து பழைய ஏற்பாட்டில் நாம் படித்திருக்கிறோம். தேவனுக்கு இணையாக என்னை நீங்கள் வணங்க வேண்டும் என்று அரசாணை பிறப்பித்தது குறித்து தானியேல் தீர்க்கதரிசனப் புஸ்த கத்தில் பார்க்கிறோம். இக்காலங்களில் கூட அப்படி நடக்கிறது.




தற்போது சீனாவில் ஆளுகை செய்யும் அதிபர் கூட, தன்னை வணங்க வேண்டுமென்று கிறிஸ்த வர்கள் அதிகம் உள்ள தென் கிழக்கு சீன பகுதியில் ஒரு அரசாணை பிறப் பித்துள்ளார். தேவாலயங்களில், வீடுகளில் இயேசு கிறிஸ்துவின் படத் திற்குப் பதிலாகத் தன்னுடைய படத்தை வைத்து வணங்க வேண்டும் என்பதே அந்த ஆணை. இப்படித் தன்னை உயர்த்தி நீங்கள் என்னைத் தான் வணங்கவேண்டும் என்றும் இயேசு கிறிஸ்துவை வணங் கினால் அவர் உங்கள் வறுமையை போக்கமாட்டார் என்றும், என்னை வணங்கினால் உங்கள் வறுமையை நான் போக்குவேன் என்றும் சொல் கிறார் என செய்தி செய்தி வெளியாகி யுள்ளது. இப்படி ஓர் ஆட்சியாளர் இப்பொழுதும் இருக்கத்தான் செய் கிறார். இனிமேலும் வருவார்கள். **“அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொ முதும் அநேக அந்திக் கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்”** என்று 1 யோவா.2:18ல் வாசிக்

கிறோம் அல்லவா?. ஆகவே நாம் ஜாக்கிரதையாக இருப்போம்.

**திருச்சபையே விழித்துக்கொள்**

திருச்சபையே விழித்துக்கொள். தேவனெனப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அதற்கு மேலாகத் தன்னை உயர்த்துகிறவன் தான் அந்திக்கிறிஸ்து. அந்த அந்திக் கிறிஸ்துவின் ஆவி உங்கள் திருச் சபையில் கிரியை செய்கிறதா? அதற்கு எதிர்த்து நின்று தேவனுக்கு முதன்மைத்துவம் கொடுக்க கற்றுக் கொள்வோம். இரண்டாவது, ஆரா தனை செய்கிற ஒரு விஷயம் வரு கிறது. தேவனிடத்தில் ஜெபிக்க நாம் செல்லும்போது, எப்படி ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து வானவர் கற்றுத்தருகிறார். நீங்கள் ஜெபம் செய்யும்போது பரமண்டலங் களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று ஜெபத்தை தொடங்க ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கற்றுத்தருகிறார் (மத்.6:9). பல திருச்சபைகளில் நாம் தேவாதி தேவனை, கர்த்தாதி கர்த்தரை நோக்கி ஜெபம் செய்யாமல் பல பரிசுத்தவான்களை நோக்கி ஜெபம் செய்யும் பழக்கம் இருக்கிறது. இந்தக் கடைசிக் காலத்தில் பூமிக்கு மேலே வானத்தின் கீழே இயேசு வின் நாமமே அல்லாமல் வேறே நாமம் நமக்குக் கொடுக்கப்பட வில்லை (அப்.4:12). என் பிதாவி னிடத்தில் கேட்கும்போது நீங்கள் கேட்கிற ஒவ்வொன்றையும் பிதா மகிமைப்படும்படி அதைச் செய்வேன் என இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் (யோவா.14:13). இயேசு கிறிஸ்து வின் நாமத்தினால் பிதாவினிடத்தில் கேட்கும்போது கேட்கிற ஒவ்வொன் றையும் பிதா அருளிச் செய்வார். மற்ற நாமங்கள், மற்றப் பரிசுத்தவான் களிடத்தில் நாம் ஜெபம் செய்ய அனுமதியில்லை. தேவன் ஒரு வரையே மேன்மைப்படுத்துவோம். அவர் ஒருவரையே ஆராதிப்போம் நாம் இதற்காகவே அழைக்கப்பட்டி ருக்கிறோம்.

மூன்றாவது பல அருவருப்பு களை நாம் இந்நாட்களில் காண் கிறோம். வேதாகம வசனங்கள் தெளிவாய் சொல்லுகிறது: அநியாயக் காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை என்று நீங்கள் அறியீர்களா வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிமார்கத்தாரும், விபச்சாரக் காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிர வேசிப்பதில்லை என்று தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் (1 கொரி 6:9,10). யார் யார் தேவனுடைய இராஜ்ஜி யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று ஒரு பெரிய பட்டியல் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலில் எல்லாவிதமான காமவிகாரங்களும், களியாட்டங்களும் உள்ளடங்கி யுள்ளது. பரி.பவுல் இந்த நிருபத்தை எழுதி 2000 வருஷங்களாகிறது. இன்றைய திருச்சபைகளில் நாம் எல்லாரையும் அனுமதிக்கிறோம். எல்லாரையும் இயேசு ஏற்றுக்கொள் கிறார் என்று சொல்லுகிறோம். ஆனால் கொரிந்து சபைக்கு எழுதும் போது பரிசுத்த பவுல் இந்த அரு

வருப்புகளுடையவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை என்று சொல்கிறார்.

பிரியமானவர்களே, இந்த அருவருப்புகளைப் பொறுத்துக் கொள்ளுகிற திருச்சபை, இந்த அருவருப்புகளை செய்கிறவர்களைப் போதகர்களாக நியமிப்பது, அவர்களை ஏற்றுக் கொண்டு குருமார்களாய் அபிஷேகம் பண்ணுவது எத்தனை பெரிய அருவருப்பு. இது அந்திக்கிறிஸ்துவின் ஆவியின் அடையாளமாக நான் கருதுகிறேன். இதற்கு நாம் விலகியிருப்போம். இதற்கு எதிர்த்து நிற்போம். கர்த்தருடைய சபை தீட்டுப்படாதபடி, அக்கிரமத்தின் கிரியைகள் தீட்டுப்படுத்தாதபடி நாம் ஜெபம் செய்ய வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். நாம் பக்தி வைராக்கியத்தோடு இவைகளுக்காக எதிர்த்து நின்று, இவைகளுக்காக குரல் கொடுத்து தேவனுடைய பரிசுத்தத்தை பாதுகாக்க வேண்டியது திருச்சபையின் கடமை.

நான்காவது, ஆராதனை குறித்த விஷயம். இயேசு கிறிஸ்து பரிசுத்த பவுல் மூலம் வெளிப்படுத்தின ஒரு விஷயம்: ஆராதிக்கப்படுவது எதுவோ, தேவனெனப்படுவதெதுவோ அதற்கு மேலாக தன்னை உயர்த்துவதுதான் அவன் குறிக்கோள் (2 தெச. 2:4). நீங்கள் கவனித்து பார்த்தீர்களானால் எருசலேம் ஆலயம் இடிக்கப்பட்டது. பாபிலோனியர்கள் ஆலயத்தை இடித்தார்கள். ரோம மன்னன் டைட்டஸ் கி.பி.70இல் ஆலயத்தை இடித்தான். ஆனால் ஆன்டியோகஸ் ஏபிபான்ஸ் என்ற செலுக்கஸ் மன்னன் அந்த ஆலயத்தை இடிக்கவில்லை. ஆனால் ஆலயத்தில் அருவருப்பைக் கொண்டு வந்து வைத்தான். அதுதான் அந்திக்கிறிஸ்துவின் ஆவி. ஆலயத்துக்குள்ளே வேறே தெய்வத்தை ஸ்தாபித்தான் (தானி.11:31). இது நடக்கப் போகிறது என்பதை வ.31 தெளிவாய் சொல்கிறது. அதுதான் அந்திக்கிறிஸ்துவின் ஆவி. அதேபோல் அந்த ஆவி திருச்சபையில் கிரியை செய்கிறது. “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்” என்று இயேசு யோவா.4:24ல் கூறியுள்ளார்.

பிரியமானவர்களே, ஆராதனை செய்யும்போது ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார். இந்நாட்களில் ஆராதனை என்ற பெயரில் வெவ்வேறு விதமான ஆராதனைகளைக் காண்கிறோம். சுய இஷ்டமான ஆராதனை என்று அப்படிப்பட்ட ஆராதனையை பரிசுத்த பவுல் கண்டித்து சொல்கிறார் (கொலோ.2:23). சுய இஷ்டமான ஆராதனை - இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை லேவி.10:1ல் காண்கிறோம். மோசேயின் மூலமாக ஆராதனை முறைமையைத், தேவன் கட்டளையிட்டிருந்தார். ஆனால் தேவன் கட்டளையிடாத அந்நிய அக்கினியை

நாதாபும், அபியூவும் கொண்டு சென்றார்கள். வேதம் சொல்லுகிறது அந்நிய அக்கினி அங்கு சென்றதால் அவர்களைப் பட்சித்துப் போட்டது. நாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்று யோசிக்கக் கூடாது.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ஒழுங்கும், கிரமுமான தேவனாயிருக்கிறார். பல வேளைகளில் நாம் பேய்களுக்கடுத்த ஆராதனை, கலாசாரங்களுக்கடுத்த ஆராதனை என்று தேவனுக்குப் பிரியமில்லாத ஆராதனை செய்கிறோம். வேத வல்லுநர்களான கால்வின், வெஸ்லி, ஸ்பர்ஜன் போன்றவர்கள் ஆராதனையில் எப்படிப்பட்ட ஒழுங்கு இருக்க வேண்டுமென்றும் எப்படிப்பட்ட இசைக்கருவிகளை பயன்படுத்த வேண்டுமென்பதிலும் கருத்துள்ளவர்களாக இருந்தனர். அது எவ்விதத்தில் பரிசுத்தத்தைப் பாதிக்கிறது என்று மிக வலிமையாகவும், தெளிவாகவும் சரித்திரத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். மேலும், இந்த சுய இஷ்டமான ஆராதனையைக் குறித்து ‘‘அது தான்தோன்றித்தனமான’’ ஆராதனை என்றும் வேதத்தில் கற்றுக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு எதிரான ஓர் ஆராதனை என்றும் ஜோசப் டயார் என்ற பிரபல போதகர் குறிப்பிடுகிறார்.

பல வேளைகளில் நாம் இசை என்று பல இசைக்கருவிகளை பயன்படுத்துகிறோம். அந்த இசைக்கருவிகளெல்லாம் தேவனுக்கேற்ப திவ்விய இசையாக இருக்க முடியாது. பிசாசுக்கேற்ற இசை எது?, தேவனுக்கேற்ற இசை எது? என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறியத்தக்க ஞான இருதயமுள்ளவர்களாய் நாம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார். இப்படி பகுத்தறியாவிட்டால் தேவனுடைய சபையில் எந்த இசை வாசிக்கப்படுகிறது என்று உங்களுக்கு தெரியாது. எந்த ஆவி கிரியை செய்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. அந்திக் கிறிஸ்துவின் ஆவியா? கிறிஸ்துவின் ஆவியா? எது உங்களை ஆளுகை செய்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. இப்போது பலவிதமான ஆராதனைகள், பலவிதமான இசைகள், பலவிதமான போதனைகள் இருக்கின்றன. திருச்சபையே நீ விழித்துக் கொண்டு தேவனாகிய கர்த்தர் என்ன சொல்கிறார் என்பதற்கு செவி சாய்க்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து (மத்.6:7-9)ல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நீங்கள் புறஜாதிகளைப் போல அதிக வார்த்தைகளை கொண்டு ஜெபம் பண்ணாதீர்கள் என்று சொல்லுகிறார். அப்படியென்றால் நாம் புறஜாதிகளைப் பின்பற்றி அவர்களைப் போல பாடல்கள் பாடக் கூடாது. புறஜாதிகளைப் போல இசை இசைக்கக்கூடாது. தேவன் வகுத்த ஒரு பிரமாணம் உண்டு. அவைகளை நாம் ஆவியில் நிறைந்து காணும் போது மட்டுமே தெரிந்து

கொள்ள முடியும். உலகத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல் ரோமர் 12:2இல் தெளிவாய் சொல்லுகிறதைப் போல ஆராதிப்போம். உலகம் எதைச் செய்கிறதோ அதை நாம் செய்யும் போது தேவனுக்குப் பிரியமற்றவர்களாய் வாழ்கிறோம். தேவனுக்கு பிரியமாயிருப்பது உலகத்துக்குப் பகையாய் இருக்கிறது. தேவனுக்கு பிரியமில்லாத இசையை வாசித்து இளைஞர்களைக் கூப்பிடுகிறோம், கவர்ச்சிக்கிறோம் என்று சொல்லி தேவனுடைய கிருபையின் பிரமாணத்தை அவமாக்குகிறீர்கள் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன். கர்த்தருடைய நாமத்தினாலே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தேவன் சொன்ன ஒரு பிரமாணமும் திருச்சபைகளில் அவமாக்கப்படக் கூடாது.

மனந்திரும்புவோம், இயேசு கிறிஸ்துவானவர் எதைக் கட்டளையிட்டிருக்கிறார்?. "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி" என்று (எபே.5:19)ல் எழுதியிருக்கிறபடி இந்த மூன்று விதமான சங்கீதங்களை நாம் கவனம் செலுத்தி கர்த்தருடைய நாமத்தை இசையினால் துதிப்போம். பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், கின்னரத்தினாலும் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும் என்று தாவீது சொல்லுகிறார் (சங்.33:2). இசைக்கருவிகளை வாசிப்பதில் தவறில்லை. ஆனால் எப்படிப்பட்ட இசை வரும் என்பது மிக முக்கியம். தேவனுக்கு எது பிரியம் என்பதை நாம் ஆவியில் அறிந்து கொள்வது மிக முக்கியம். இந்த நாட்களில் திருச்சபைகளில் பாழாக்கும் அருவருப்பு நுழையாதபடி நாம் எச்சரிக்கையாய் இருப்போம். நாம் வேண்டுதல் செய்வோம். ஆமென் ●

**- நன்றி: டாக்டர்.பால் N, www.gloryofJesus.org. Chennai. Mo:9884739635**

---

**4ஆம் பக்கத் தொடர்ச்சி...**

**பாவங்களின் உச்சக்கட்டத்திற்கு இப்போது இந்த உலகம் வந்திருக்கிறது.** இந்த உலகம் முழுவதும் அக்கினியால் அழிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஆண்டவர் நீடிய பொறுமையாய் இருக்கிறார் (2பேது.3:9). இந்த உலகம் அக்கினியால் அழிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருப்பதால் **"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!"** என்ற (2பேது.3:11)ன்படி நாம் சிந்தித்துச் சீர்பட வேண்டிய அவசர காலகட்டத்திற்குள் வந்திருக்கிறோம். நோவா, செய்ததை சற்று உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள். ஆண்டவர் என்ன சொன்னாரோ அதை **நம்புவதற்கு ஏதுயில்லாதிருந்தும் விசுவாசித்தான்.** தேவ எச்சரிப்பைப் பெற்று **தேவபக்தியுள்ளவனானான். தன் குடும்பத்தை இரட்சிக்கப் பேழையைச் செய்தான்.** உலகம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டபோது விசுவாசத்தினாலுண்டான **நீதிக்குச் சுதந்தரவாளியானான்** (எபி.11:7). நாமும் அப்படியே செய்வோம்.

இயேசுவின் பணியில், K.செல்வின் தங்கதுரை

**இந்தியச் செய்திகள்**

# சீரழிந்து கொண்டிருக்கும் இளைஞர் சமுதாயம்

சமூகவலைத் தளத்தில் இன்ஸ்டாகிராம் உரையாடல் (Instagram Chat) என்ற ஒரு செயலி இருக்கிறது. தேசத்தின் தலைநகராகிய புதுடெல்லியில் உயர் நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படித்துக் கொண்டிருக்கும் ஒத்த கருத்துகள் (Like minded Teen aged boys) அடங்கியவர்கள், குழு அமைத்து அதற்கு **"பாய்ஸ் லாக்கர் ரூம்"** (Boys Locker Room) என்று பெயரிட்டு அழைக்கின்றனர். கொரோனா வைரஸ் மூலமாக பெரும் பாதிப்பை உண் டாக்கி உயிரிழப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் இளைஞர் மத்தியில் அதிர்ச்சியை உண்டாக்கும் பெரும் பண்பாட்டுச் சீரழிவை உண் டாக்கும் (Degeneration of Character) செயலைக் காண்கிறோம். 'அட்மின்' என்று சொல்லப்படுகிற தலைவன், 15 வயது மாணவன் ஒருவன் கைதானதின் காரணமாக வெளிவந்துள்ளது. இந்தக் குழுவில் பதின் வயதினரான(teen age) மாணவிகளும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இக்குழுவிலுள்ள அனைவரும் தங்கள் படங்களைப் பல கோணங்களில் எடுத்து அதில் பதிவு செய்துள்ளனர். அவற்றுள் பெரும்பான்மையானவை. அரை நிர்வாண ஆபாசக் கோணங்களில் பதிவு செய்கின்றனர் அல்லது அதை ஆபாசமாகத் திரித்துப் பதிவு செய்துள்ளனர். செயலியில் குழுவாக அமர்ந்து ஆபாச உரையாடல்களில் ஈடுபடுகின்றனர். (எல்லாவற்றையும் விளக்கிச் சொல்ல முடியாது) இதில் மணிக்கணக்காகச் செலவிடுகின்றனர். பதிவாகியுள்ள அவர்கள் பேசிய காரியங்களின் பதிவுகளையும் காவல்துறையினர் கைப்பற்றி யுள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட ஒரு மாணவி "என்னுடைய வாழ்க்கை சீரழிந்துபோயிற்று. இப்போது என் ஜீவனே அச்சுறுத்தலுக்கு உட்பட்டுவிட்டது" என்று கதறும் நிலையை எட்டியுள்ளாள். இதுதொடர்பான வழக்கு பதிவு செய்யப் பட்டு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. பத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. - நன்றி: **The Hindu** 6.5.20

**சிந்தனைக்கு...**

கொரோனா வைரஸ் வெளிப்படையாகத் தோன்றும் சில அறிகுறிகளைக் கொண்டு அடையாளங்கண்டு அதிலிருந்து தப்பிக்க பின்பற்றக் கூடிய சில வழி முறைகள் இருக்கின்றன. ஆனால் இரகசியமாகத் தொடரும் வக்கிரமான பாலியல் நடக்கை (Conduct of sexual perversion) எளிதில் கண்டுபிடிக்க முடியாது. இந்த கண்ணுக்குத் தெரியாத வைரஸ் (invisible virus), ஆழ வேரூன்றி அவர்களை அழிப்பதுடன் அதில் ஈடுபடும் மற்றவர்களையும் அழிக் கும் காரணியாக அமைந்து விடுகின்றன. இது மாம்ச இச்சையை (carnal lust) செயல்படுத்த உள்தூண்டுதலை உண்டாக்கி அருவருப்பான பாவச் செயல் களுக்கும் கொண்டு செல்லுகிறது. இளைஞர் சமுதாயம் சீர்பட ஜெபிப்போம். ●

# நாம் செய்யும் ஆராதனை புத்தியுள்ள ஆராதனைதானா?

பரிசுத்த பவுல் ரோமருக்கு எழுதிய கடிதத்தில் இதுபற்றி என்ன சொல்கிறார் என்பதைக் காண்போம். பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும் கடிதம் பிறசபை களுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து வேறுபடுகிறதைக் காண்கிறோம். பிற கடிதங்களில் பெரும்பாலும் சபையின் உடன் பணியாளர்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகளைக் களைவதற்குரிய ஆலோசனை குறிப் பிடப்படுகின்றன. ஆனால், ரோமாபுரியாருக்கு எழுதுகிற கடிதத்தில், நாம் அன்றாடம் நல்ல கிறிஸ்தவர்களாக எப்படி வாழவேண்டும், பிற பிரிவினர் களோடு நம்மை எப்படித் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும்? தமது விசு வாசத்தை எப்படி நம் செயல்களில் பிரதிபலிக்கவேண்டும்? என்பன போன்ற சிந்தனைகளை, அறிவுறுத்தல்களை, பகிர்வதைக் காண்கிறோம். வேதபண்டி தர்கள், ரோமர் 12முதல்15 அதிகாரங்களின் சாராம்சத்தை நமது ஆண்டவரின் மலைப் பிரசங்கத்திற்கு ஒப்பிடுவது குறிப்பிடத்தக்கது.

நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையை விளக்குவதற்கு பரிசுத்த பவுல் இவற்றைச் செய்யுங்கள். இவற்றைச் செய்யாதிருங்கள் என்று பகுத்து உணர்த்துவதைப் பார்க்கிறோம்.

**இவற்றைச் செய்யாதிருங்கள்**

* இந்த பிரபஞ்சத்திற்கொத்த வேஷம் தரிப்பதைச் செய்யாதிருங்கள்.

* இந்த உலகமும், உலகத்தின் காரியங்களும் பொல்லாப்பும், அநீதியும் நிறைந்ததவைகளாயிருக்கின்றன. அவைகள் நம் சரீரத்தை அழித்துப் போடும் தன்மை யுடையதாய் இருப்பதாலும் அவைகள் எப்போதும் தேவனுக்கு விரோதமாகவே செயல்படுகின்றனவாயிருப்பதாலும் அப்படிப்பட்டவைகளைச் செய்யாதிருங்கள்.

* நாம் உலகத்தில் வாழ்ந்தாலும் இந்த உலகத்திற்கு உரியவைகளைச் செய்யாதிருக்க வேண்டும்.

* பதிலுக்குப் பதில் செய்யாமலும் பழிவாங்காமலுமிருங்கள்.

* உங்கள் சகோதரனை மற்றவர்களுடைய வேலைக்காரனை மற்றும் ஒருவரையொருவர் குற்றவாளி என்று தீர்க்காதிருங்கள்.

* உங்கள் அன்பு மாயமற்றதாக இருப்பதாக. ஒருவரிலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள்.

* உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப் படுத்துகிறதற்காவது ஏதுவாக இருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யா திருங்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவனின் பாவத்தைப் போக்க ஆடு, மாடு, பறவை என்று ஏதாவது பலி கொடுப்பது பழக்கத்திலிருந்தது. பலிபீடத்தில்

செய்யப்படும் பலி கடவுளுக்குச் சொந்தம். பலியிட்டபிறகு பலியிடுபவனுக்கு அது சொந்தமல்ல. புதிய முறைமையின்படி கிறிஸ்து நமக்காக பலியானார். நமக்காக பலி செலுத்தப்பட்டபடியால், நாம் விலை கொடுத்து வாங்கப்பட்டு விட்டோம். நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல. உயிருள்ள பலியாக, நித்தம், நம்மை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய அழைக்கப்படுகிறோம். அப்படியானால் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்க முடியாது. கடலில் வாழ்கிற மீன், தன்னை எப்படி உப்பாக்கிக் கொள்வதில்லையோ, நீரிலேயே கிடக்கும் தாமரை இலை எப்படி தன்மேல் நீர் ஒட்டாமல் இருக்கிறதோ, அதுபோல, நாம் உலகில், வாழ்ந்தாலும், உலகத்தால் கறைப்படாமல் இருக்க அழைக்கப்படுகிறோம். நாம் செய்யும் ஆராதனை மேற்குறிப்பிட்டபடி புத்தியுள்ள ஆராதனையாய் இருக்க பவுல், இவற்றைச் செய்யாதிருங்கள் என்கிறார்.

**எதைச் செய்ய வேண்டும்?**

* உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலி யாகவும் ஒப்புக் கொடுக்க வேண்டும்.

* தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

* எல்லா மனுஷருக்கும் முன்பாக யோக்கியமானவைகளைச் செய்ய நாட வேண்டும்.

* எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருக்க வேண்டும்.

* உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடுங்கள். அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடுங்கள்.

* கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டதுபோல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்.

* பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள்.

நம் மனது மறுரூபம் அடைய நாடவேண்டும். பகுதி மாற்றமல்ல, முழு மையான மாற்றம். வெளிப்படையாகத் தோன்றுகிற மாற்றமல்ல. உள்ளான மன மாற்றம். வேதம் வாசிப்பது, செய்திக்காக அல்ல, மாற்றத்திற்காக (Not for information - but for transformation) மறுரூபமாக்கப்பட்டவர்களின் வாழ்வு நமக்கு எதை உணர்த்துகிறது?. அவர்கள் இந்த உலகத்திலிருந்தாலும், இதிலிருந்து பிரித்தெடுக்கபட்டவர்கள். அவர்களின் வஸ்திரம் உறைந்த மழை போல், எந்த வண்ணானாலும் வெளுக்கக்கூடாத வெண்மையான பிரகாசமாயிருக்கும். மோசே, எலியா, போன்றவர்கள் இதற்கு எடுத்துக்காட்டானவர்கள் இல்லையா!

**இந்த உலகில் மறுரூபமடைவது சாத்தியமா?**

நமது சொந்த முயற்சியால் இது ஒருக்காலும் சாத்தியமாகாது. ஆனால், நமது இயலாமையை உணர்ந்து, மறுரூபமாக்கும் ஆற்றல் கடவுளிடம் உண்டு என்பதை உணர்ந்து அறிக்கையிடும்போது, ஆண்டவர் நம்மை

மறுரூபமாக்குகிறார். ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து, அவரிடம் நம்மை ஒப்புக் கொடுக்கும்போது அவரின் ஆளுகைக்குள் வருகிறோம். ''கடவுளுக்குக் கீழ்ப்படி - உனக்குண்டான எல்லாவற்றையும் அவர் பார்த்துக் கொள்வார்'' என்பார் ரெவ.டாக்டர்.ஸ்டான்லி. ஆண்டவர் நம்மை மேற்கொண்டு ஆளுகை செய்யும் போது, நம் சுயம் மறையும். கிறிஸ்து நம் வாழ்வின் மையமாவார். பழைய ஆதாம் நம்மில் தொடரமுடியாது.''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்...எல்லாம் புதிதாயின''2 கொரி.5:17. எல்லாம் மறுரூபம் அடையும். மறுரூபம் அடைய நமக்கு விருப்பமுண்டா? கடவுளிடம் நம்மை முற்றிலுமாய் அர்ப்பணிக்கும்போது அவர் மறுரூபப்படுத்துவார். அதுவே நாம் செய்யும் புத்தியுள்ள ஆராதனையாய் இருக்கும்.

**புதியசிருஷ்டி**

ஒருவன் புதியசிருஷ்டியாகும்போது தேவனுடைய நன்மையும் அவருக்குப் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னது என்று பகுத்தறியும் ஆற்றலைப் பெறுகிறான். இதைவிட பெரிய சிலாக்கியம் / ஆசீர்வாதம் ஒரு மனிதனுக்கு வேறு என்ன வேண்டும்! ஆம், **தேவசித்தத்தைப் பகுத்தறியும் ஆற்றல் பெறும்போது நமது சரீரத்தை ஆண்டவரின் ஆலயமாகவும், இருதயத்தை உடன்படிக்கைப் பெட்டியின் இருப்பிடமாகவும், மாற்றும் ஆற்றல் பெற்று மகிழ்வோம்**. உங்கள் சரீரங்களை தேவனுக்கேற்கும் பலியாக ஒப்புக் கொடுங்கள் என்று பவுல் கூறுகையில், அவர் சொல்ல முற்படுவது என்ன? சரீரத்தோடு, நம்முடைய எல்லா குணாதிசயங்களையும் பண்புகளையும் மிகச்சிறிய பணியோ அல்லது மிகப்பெரிய பொறுப்புள்ள பணியோ அதனை கடவுளுக்கு ஒப்புகொடுக்க முனைவோம். அப்படிச் செய்கையில் அந்த ஒவ்வொரு பணியும் / செயலும் ஓர் ஆராதனைச் செயலாக மாற்றம் பெற்று, கடவுளின் நாமம் மகிமைப்படுத்தப்படும். ஆம் ஆராதனை என்பது, ஞாயிறு, வெள்ளி தினங்ளோடு நின்றுவிடாமல் அல்லது ஆலய அளவில் நின்று விடாமல் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் ஆராதனை செயலாக மாறும். எந்தப் பணிக்குச் சென்றாலும் நான் தேவனை ஆராதிக்கப் போகிறேன் என்கிற சிந்தனை நம்மை மேற்கொள்ளும். நாம் செய்யும் ஒவ்வொரு ஆராதனையும் அர்த்தமுள்ள ஆராதனையாக மாறும்! இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. இதை உரைகல்லாய் கொண்டு நம் ஒவ்வொருவருடைய ஆராதனையும் புத்தியுள்ள ஆராதனைதானா என்று பரிசோதித்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம். ஆகையால் இந்த பிரபஞ்சத்துக்கொத்த வேஷம் தரியாமல், நம் மனம் புதிதாகிறதினாலே, மறுரூபமாவோம். கிறிஸ்து நம்மில் வாழ்வதை உணரமுடியும். நமது இரட்சகராகிய கிறிஸ்து இந்த உலகைக் காண்கிறது போல், நாமும் காணமுடியும்.

இந்த உன்னத அனுபவத்தைப் பெறும்போது நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் ஆராதனையாக கடவுளுக்குக் கொடுக்கமுடியும். இப்படி செய்வதே நமது உயிர்த்தெழுந்த ஆண்டவரின் எதிர்பார்ப்பு. ●

- Dr. J. JOHNSHON SUNDARARAJ, Ph.D
Former, Vice Principal, American College. Mobile: 98436-80054

## பாடம் புகட்டும் 'காக்லிபர்' விதை

ஆண்டவரின் படைப்பில் ஆச்சரியம் தரும் காரியங்கள் அநேகம் இருக்கின்றன. அவற்றுள் காக்லிபர் என்ற காட்டுச்செடி குறிப்பிடத்தக்கது. அதன் காய் பழுத்து பின்னர் காய்ந்து, வித்தாக அதே செடியிலேயே இருக்கும். காய்ந்த வித்தின் வெளிப்புறத்தில் ஒட்டும்புல் போன்ற பகுதியிருக்கும். காட்டு மிருகங்கள் அதைக் கடந்து உரசிக் கொண்டு செல்லும்போது ஒட்டுப்புல்லின் உதவியோடு மிருகத்தின் சரீரத்தில் ஒட்டிக்கொள்ளும். மிருகங்கள் உடலைச் சிலிர்த்து உதறும்போது அந்த வித்துக்கள் கீழே விழுந்துவிடும். இப்படியாக அச்செடிகள் பல இடங்களுக்கும் பரவுகின்றன.

இந்த வித்தின் மற்றுமொரு தனிச்சிறப்பு என்னவெனில் ஒரு வித்திற்குள் 5 விதைகள் இருக்கும். இந்த 5 விதைகளும் ஒரே சமயத்தில் முளைப்பதில்லை. ஒரு விதை தான் முளைக்கும். மற்ற நான்கு விதைகளும் முளைக்காமலேயே இருக்கும். அடுத்த விதை ஒரு ஆண்டு கழித்துதான் முளைக்கும். மற்ற மூன்று விதைகளும் அடுத்த அடுத்த ஆண்டுகளில் முளைக்கும். அப்படியானால் எந்தெந்த விதை எந்தெந்த ஆண்டு முளைக்க வேண்டுமென படைத்த ஆண்டவர் ஒரு முறைமையை அது அதற்கு முன் நிர்ணயித்து வைத்திருக்கிறார் என்பது எவ்வளவு பெரிய ஆச்சரியம். அந்த விதைகள் அதன் அதன் முறைமைக்கு (Turn) கீழ்ப்படிந்து பொறுமையோடு காத்திருக்கின்றன என்பது நமது சிந்தனைக்கு எட்டாத ஆச்சரியமாயிருக்கிறது. ஆண்டவரின் படைப்பில் விசேஷித்தவர்கள் என்று கருதப்படும் நம்முடைய கீழ்ப்படிதலும், பொறுமையும் எப்படி இருக்கிறது?

இந்த விதையைக் குறித்து ஆராய்ச்சி செய்த கிரகாம் ஹோட்ஜஸ் என்பவர் இதை விவரித்துள்ளார். **நன்றி: தகவல்-தினமலர்-ஆன்மீக மலர் 17.4.2020** ●

**வெளிநாட்டுச் செய்தி**

## நோயை ஆயுதமாக்கக் கூடாது

"ஒரு நோயை ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்ற எண்ணமே இருக்கக் கூடாது. உயிரி ஆயுதங்களுக்குத் தடையுள்ளது. இருப்பினும் தற்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சிகளால் இந்த ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதைத் தடுக்க உலகநாடுகள் விழிப்புடன் கண்காணிக்க வேண்டும்". உயிரி ஆயுதம் (Bio Weapons) தடைக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டதின் 45ஆவது ஆண்டையொட்டி ஐ.நா.பொதுச் செயலர் அண்டோனியோ குட்டரஸ் வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கண்டபடி கூறியுள்ளார். **- நன்றி: தினமலர் 30.3.20** ●

# இயேசுவுடன் நிக்கொதேமுவின் சந்திப்பு

## (Nicodemus' Encounter with Jesus)

நிக்கொதேமு, 70 பேர் அடங்கிய யூதர்களின் ஆலோசனைச் சங்கத்தில் ஓர் உறுப்பினர். ஆகவேதான் "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் வேதத்தை நன்கு அறிந்து போதிக்கும் ஆற்றலுள்ளவராக இருந்தார். ஆகவேதான் இயேசு "இஸ்ரவேலில் போதகன்" (Teacher of Israel) என்றார். எருசலேமிலிருந்த மூன்று பெருஞ் செல்வந்தர்களில் இவரும் ஒருவர் என்று சொல்லப்படுகிறது. மேலும் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த யூத வரலாற்று ஆசிரியர் ஜோசபஸ் என்பவரின் உடன்பிறந்த சகோதரர் என்றும் அவரது முழுப் பெயர் நிக்கொதேமு பென் கொரியன் என்றும் சொல்லப்படுகிறது. இவர் ஒரு பரிசேயர். பரிசேயர் என்ற சொல்லுக்கு "பிரிந்தவர்கள்" (Separatists) என்று அர்த்தம். யூதருக்குள் மார்க்க வைராக்கியமுள்ள கூட்டத்தார். இவர்கள் இயேசுவின் போதனைக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். இயேசுவும் பரிசேயர்களுடைய மாய்மாலமான போதனைகளையும் செயல்பாடுகளையும் மிகவும் கடுமையாகச் சாடி வந்தார். சுருக்கமாகச் சொன்னால், பரிசேயர்கள் வெளிப்படையாக மட்டும் மோசேயையும், மோசே மூலம் கொடுக்கப்பட்டப் பிரமாணங்களுக்குள்ளும், தேவாலயம், அங்கு நடக்கும் பலிகளுக்குள்ளும் அடக்கிக் கொண்டவர்கள். இந்தப் பின்னணியத்தின் மத்தியிலும் நிக்கொதேமு, இயேசுவின் போதனைகளைக் கேள்விப்பட்டதால் "இவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" என்றும் "அவரோடு தேவன் இருக்கிறார்" என்றும் "ஆகவேதான் அற்புதங்கள் செய்யமுடிகிறது" என்றும் எண்ணங்கள் உருவாயிற்று. ஆகவேதான் இயேசுவை நேரில் சந்திக்க விரும்பினார். யூதர்களுக்கு பயந்தபடியால் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்தார். இரவானாலும், பயத்தையும் மேற்கொண்டு இயேசுவை அவர் சந்தித்தது மேன்மையான காரியமே. ஏனெனில் அவர் இயேசுவை சந்தித்துத் திரும்பும் போது இயேசுவைக் குறித்தும், தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து சரியாகப் புரிந்ததுமல்லாமல், தான் எங்கே இருக்கிறேன் என்ற தன்னைக் குறித்தும் புரிந்து கொண்டார் (Perfect understanding of Jesus and the kingdom of God and himself as to where he is). அது நிக்கொதேமுவை முற்றிலும் மாற்றிற்று. சுருக்கமாகச் சொன்னால் புதிய ஜீவனைப் பெற்றுக் கொண்டார். ஆனாலும் இயேசுவின் மரணநாள் வரை நிக்கொதேமு இரகசிய கிறிஸ்தவராகவே இருந்தார்.

### சந்திப்பும் விளைவும்

இயேசு நிக்கொதேமுவைக்

கண்டார். நல்ல சன்மார்க்கப் பண்புகள் நிறைந்தவனாக (High Moral Character), யூதர்களுள் பரிசே யர்களின் மார்க்க வைராக்கியம் நிறைந்த ஒரு தலைவனாக, மதரீதி யாக மேலும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆழ்ந்த பசியுள்ள வனாக, அதே சமயத்தில் ஆவிக்குரிய குருடனாக (Spiritual Blindness) இயேசு அவனைக் கண்டார். நிச்சய மாக மற்றவர்களின் மதிப்பீட்டிற்கு இது முற்றிலும் மாறான மதிப்பீடாகும். இயேசு முகத்தை மாத்திரம் பார்ப் பவர் அல்ல. இருதயத்தைக் காண் கிறவர். நிக்கொதேமு இயேசுவின் போதனைத் திறனையும், இயேசு தேவனோடிருப்பதையும் அவர் செய்த அற்புத நிகழ்வுகளையும் பேசுகிறார். இயேசு அவற்றை யெல்லாம் புறந்தள்ளிவிட்டு விசு வாசத்தின் அடிப்படையிலான **மூன்று விதமான பிறப்பைப் பற்றியும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கும் அடிப்படைத் தகுதியைக் குறித்தும் பேசுகிறார்.** இஸ்ரவேலில் போதகராகிய நிக்கொ தேமுக்குப் புதிராகத் தோன்றுகிறது. வியந்து நிற்கிறார்.

தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்த பிறப்பைக் குறிப்பிடுகிறார். அந்த பிறப் போடு நின்றுவிடாமல் ஒருவன் மறு படியும் பிறக்க வேண்டும் (Born again) என்கிறார். முதிர்வயதானவன் மீண்டும் தாயின் கர்ப்பத்திற்குள் பிரவேசித்துப் பிறக்க முடியுமா? அது சாத்தியமானதா? நிக்கொதேமுக்கு விளங்கவில்லை. ‘‘மறுபடியும்’’ (again) என்ற சொல்லுக்கு ‘‘உன்ன தத்திலிருந்து பிறத்தல்’’ (Born from above) என்ற மற்றொரு அர்த்தமும் உள்ளது. அப்போஸ்தலனாகிய யோவான் முதலாம் அதிகாரத்தில் இதை விவரித்திருப்பதைக் காண் கிறோம். இயேசு தேவனிடத்திலிருந்த வந்தப் போதகர் என்றும், தேவன் அவரோடிருக்கிறார் என்றும் அறிந் திருக்கிற நிக்கொதேமுக்கு அவரது போதனையில் விசுவாசம் வைக்க முடியாதவனாயிருக்கிறார். ஏனெனில் நிக்கொதேமு ஒரு பரி சேயர். தேவன் அனுப்பிய இயேசு வின் நாமத்தின் மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர் களோ அத்தனை பேர்களும் தேவ னுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (யோவா.1:12), வேறு விதமாகச் சொன்னால் இயேசுவோடு தகப்பன் பிள்ளை என்ற குடும்ப உறவு நிலைக்கு வர விசுவாசத்தைக் கொண்டு தேவனால் பிறக்க வேண்டும் என்பதை வலியுறுத்து கிறார். ‘‘அவர்கள் இரத்தத்தினா லாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்த வர்கள்’’ என்று (யோவா.1:13)ல் குறிப்பிடுகிறார். இந்த அனுபவத்தை ‘‘ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால் தேவனுடைய இராஜ்ஜி யத்தைக் காணமாட்டான்’’ என்று (யோவா.3:3)ல் குறிப்பிடுகிறார்.

அதே அதிகாரத்தின் 5ஆவது வசனத்தில் இதிலும் மேலான அனுபவத்தை அதாவது "ஆவியினால் பிறப்பதைக்" (spiritual birth) குறித்துப் பேசுகிறார். **சரீரப் பிரகாரமான பிறப்பிற்கு பெற்றோர் (தாய்-தகப்பன்) தேவைப்படுவது போல ஆவிக்குரிய பிறப்பிற்கும் இரண்டு பேர் அவசியம். அதாவது தேவனுடைய ஆவி (The spirit of God) (யோவா.3:5) மற்றும் தேவனுடைய வார்த்தை (The Word of God).** யாக்.1:18ல் "நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" என்றும், 1 பேது.1:23-25ல் "தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்றும் சொல்லப்பட்டுள்ளது. **தேவனுடைய ஆவியையும், தேவனுடைய வார்த்தையையும் ஒரு பாவியாகிய மனிதன் அப்படியே விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய ஜீவன் அந்த மனிதனுக்குள் வழங்கப்படுகிறது** (Imports the life of God). **அதுவே ஆவியினால் பிறத்தல்**. பெற்றோரின் சாயலில் குழந்தை பிறப்பதுபோல தேவ சாயலில் நாம் வளருவோம். எவ்வளவு பெரிய சிலாக்கியம். யோவான் 3:5ல் ஜலத்தினால் பிறப்பதைக் குறித்துப் பேசுகிறார். இயேசு புதிய பிறப்பு என்பது ஜலத்தினால் பிறப்பது என்று நிக்கொதேமுக்கு போதிக்கவில்லை. தண்ணீரில் முழ்குவது என்பது முதலாவதாக மரணத்தைக்(Death) குறிப்பதாகும். மூழ்கி எழும்புவது என்பது உயிர்த்தெழுந்த இயேசு வைப் போல ஒரு புதிய ஜீவனோடு எழும்புவதற்கு அடையாளமாக இருக் கிறது. இது ஒரு சடங்காச்சாரமான செயலுக்கு ஒப்பானதல்ல. இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய தியாக இரத்தத்தை விசுவாசத்தோடு பற்றிக் கொள்ளும்போது அந்த கிருபாதார பலியும் அதைத் தொடர்ந்த உயிர்த்தெழுதலும் நமக்குப் பலிக்கும் (ரோம.3:26).

கிருபாதார பலி என்பது சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் உள்ளடக்கியதே. விசுவாசத்தோடு கூடிய கீழ்ப்படிதலுக்கு அவருடைய கிருபை இறங்கி அனுகூலமான செயல் உருவாகிறது. ஆகவேதான் (யோவா.3:3)ன் படி "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்" என்றும், யோவா.3:5ன் படி ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது என்றும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காணும் அனுபவத்தையும், பிரவேசிக்கும் அனுபவத்தையும் வித்தியாசப்படுத்திக் காட்டுவதை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். (யோவா.1:12)ன் படி முதல் அனுபவத்தில் நாம் தேவனுடைய பிள்ளைகள் (Children of God). இரண்டாவது அனுபவத்தில் நாம் தேவனுடைய புத்திரர் (Sons of

God) (ரோம.8:17). நாம் புத்திர ரானால் நாம் அவருடைய சகல ஆசீர்வாதங்களுக்கும் சுதந்திர வாளிகள் என்ற உத்தரவாதம் நமக்குத் தரப்பட்டிருக்கிறது (ரோம.8:17). நாம் எந்த நிலையிலி ருக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். பிள்ளைகள் என்ற ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறோமா? அதிலிருந்து வளர்ந்து புத்திரர் என்ற நிலைக்கு உயர்திருக்கிறோமா? நாம் சுதந்திரவாளிகள் தானா? மரணத் திற்குப் பின்னான நித்திய வாழ்வில் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்போம் என்ற நிச்சயமிருக் கிறதா?

பரிசேயர்களுள் யாருக்கும் கிடைக் காத பெரிய சிலாக்கியத்தை நிக்கொ தேமு அறிந்து, அடைந்துகொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார் என்பதை எண்ணிப்பாருங்கள். இயேசுவின் போதனையின் வளர்ச்சி யால் இயேசுவைப் பின்பற்றுவோர் பெருகுகிறார்கள் என்ற பொறாமை யின் காரணமாக இயேசுவை ஆக்கினைக்குள்ளாக்க பரிசேயர்கள் முயன்றனர். அப்பொழுது ஆலோ சனை சங்கத்திலிருந்த நிக்கொதேமு "ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட் படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா" (யோவா.7:51) என்ற கேள்விக் குரலை எழுப்பி ஆக்கினையைத் தடுத்தவர்.

**நிக்கொதேமுவின் இறுதி நாட்கள்**

பிரதான ஆசாரியனான காய்பா, முன்னாள் பிரதான ஆசாரியனாகிய அன்னா மற்றும் பரிசேயர்களிள் சதி ஆலோசனையால் தேசாதிபதியாகிய பிலாத்துவை தங்கள் ஆலோ சனைக்கு உடன்படச் செய்து இயேசு வைக் கைது செய்து, விசாரணைக்கு உட்பட வைத்து சிலுவையில் அறைந்து கொல்லப்பட தீர்ப்பு வழங்கப் பட்டது. இதுவரை அந்தரங்க சீஷ னாகவே இருந்த நிக்கொதேமு இப்பொழுது வெளியரங்கமாகச் செயலில் இறங்கினார். அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு ஒரு பெருஞ்செல்வந்தன். அவன் யூதர்களுக்குப் பயந்தபடியால் இயேசுவுக்கு ஓர் அந்தரங்க சீஷனா கவே இருந்தான். இப்பொழுது இயேசுவின் சரீரம் அடக்கம் செய்யும் பொருட்டு பிலாத்துவை அணுகி சரீரத்தைப் பெற்றுக் கொண்டான். இந்த யோசேப்பு இயேசுவுக்கு நெருங்கிய உறவினராக இருந் திருக்க வேண்டும். ஏனெனில் யூத முறைமையின்படி அடக்கம் பண்ணப்பட வேண்டிய சரீரத்தை நெருங்கிய உறவினரிடம்தான் ஒப்பு விக்கப்பட வேண்டுமென்ற நியதி அப்போதிருந்தது. அப்பொழுது நிக்கொ தேமுவும் வெளிப்படையாகவே அரி மத்தியா யோசேப்புடன் இணைந்து அடக்கத்திற்கான காரியங்களில் செயல்பட ஆரம்பித்தார். நிக்கொ தேமு வெள்ளைப் போளமும் கரிய போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான் என்று

(யோவா.19:39)ல் காண்கிறோம். இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்கு அருகாமையிலேயே வெட்டப்பட்ட ஒரு புதிய கல்லறை இருந்தது. அதில் அடக்கம் செய் தார்கள்.

நிக்கொதேமுவின் நடக்கையைக் கண்ணுற்ற பரிசேயர்கள் உடனடி யாகச் செய்த காரியம் அவரை ஆலோசனை சங்கத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்தார்கள். மேலும் எருசலேம் நகரிலிருந்த சகல உரிமைகளையும் பறித்து எருசலேமில் குடியிருக்கவிடாமல் அவரை விரட்டினார்கள். என் னென்ன வகையில் அவருக்கு உபத்திரவம் கொடுக்க முடியுமோ அவ்வளவு உபத்திரவங்கள் கொடுத் தனர். எருசலேமில் மூன்று பெருஞ் செல்வந்தர்களுள் ஒருவராக யிருந்த அவர் இப்பொழுது தரித்திர ரானார். ஆனாலும் பாரம்பரியத் தகவல்களின்படி தரித்திரத்தை அவர் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர் தரித்திர ராகவே மரித்தார். ஒரு மனிதன் இந்த உலகில் வாழும் காலத்தில் எப்படி வாழ்ந்தான் என்பது காரிய மல்ல. இயேசுவோடு அவனுடைய நெருங்கிய நல்லுறவு (Intimate Fellowship) எப்படி இருந்தது என்பதே காரியம். அந்தரங்க சீஷனாக வாழ்ந்து, வெளிப்படையான சீஷனானபோது நிராகரிக்கப்பட்டி ருந்தாலும் நித்திய வாழ்வில் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் என்றும் இயேசுவின் சீஷனாக வாழும் சிலாக் கியத்தைப் பெற்றுக் கொண்ட நிக்கொ தேமுவின் வாழ்வு எவ்வளவு பெரியது. ‘‘ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண் டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரி யத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; மேன்மைபாராட்டு கிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக் கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ (எரே.9: 23,24). கர்த்தருக்குப் பிரியமானதை நிக்கொதேமு பற்றிக் கொண்டார். ‘‘உங்களுக்கு ஐயோ’’ என்று இயேசு சொல்லத்தக்க இடத்திலிருந்த பரிசேயன் ‘‘எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திராயிருக் கிறார்கள்’’ என்ற வேதவாக்கின்படி தேவனுடைய குமாரன் என்ற இடத்தை எட்டினார். ஆசீர்வாதங் களுக்கு சுதந்திரவாளியாக மாறினார். அவன் தரித்திரனல்ல. இயேசுவின் சமுகத்தில் மாபெருஞ்செல்வந்தன்.

இந்த ஆக்கத்தின் பெரும்பான் மையான தகவல்கள் The Bible Exposition Commentary (New Testament) - **Warren Wiersbe**, and unger Bible Dictionary லிருந்து சேகரிக்கப் பட்டவை. ●

## என்னை நோக்கிப் பாருங்கள்

1850 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆவது நாள். இங்கிலாந்திலுள்ள கோல்செஸ்டர் நகரம் (City of Colchester) கொடிய பனிப்புயலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நேரம். பதின்வயதினான ஒரு வாலிபன் வழக்கமாகச் செல்லும் ஆலயத்திற்குச் சென்றடைய முடியாததால் அருகிலிருந்த பூர்வீக மெதடிஸ்ட் ஆலயத்திற்குள் (Primitive Methodist Church) நுழைந்தான். வழக்கமாக சபையை நடத்தும் போதகர் வராததால் பொது நிலையாளரான (Lay man) ஒரு சாதாரண மனிதர் ஆராதனை நடத்த ஆரம்பித்தார். **"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்"** (ஏசா.45:22). இதுதான் அவர் தெரிந்து கொண்ட பிரசங்க வசனம். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பதின்வயதினான வாலிபன் இரட்சிப்பின் அவசியத்தை விளங்கியிருந்தானே தவிர பெற்றுக் கொள்ளும் வழியைக் குறித்து நிச்சயமில்லாதவனாக இருந்தான். அவன் ஒழுங்காக ஆலயத்திற்குச் செல்லுகிறவன்தான். அவனுடைய தகப்பனாரும், தாத்தாவும் போதகர்கள்தான். எனினும் அவர் பேசுவதை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தான்.

தற்காலிகமாக வந்த அந்த பொதுநிலையாளருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. சுருக்கமாகப் பேசினாலும் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். "என்னை நோக்கிப்பாருங்கள்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். நோக்கிப் பார்ப்பதற்கு யாரும் கற்றுத் தர வேண்டியதில்லை. நோக்கிப் பார்க்கக் கல்லூரியில் போய் படிக்க வேண்டிய தில்லை. ஒரு சின்னகுழந்தை கூட "குட்டி, இங்கே பாரு" என்றால் அது நோக்கிப் பார்க்கும். யாரும் நோக்கிப் பார்க்கமுடியும்". இந்த நேரத்தில் பதின்வயதினனான அந்த வாலிபன் மீது அவர் பார்வைபட்டது. "தம்பி, ஏன் பரிதாபமாக உட்கார்ந்திருக்கிறாய்? தம்பி, இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார். இப்போதே நீ இரட்சிக்கப் படுவாய்". அந்த வாலிபன் விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்தான். யார் அந்த வாலிபன்? அவன்தான் பின் நாட்களில் உலகப் பிரசித்திப் பெற்ற பிரசங்கி C.H.ஸ்பர்ஜன். அந்த நாள்தான் அவர், மனந்திரும்பிய நாள். - நன்றி: The Bible Exposition Commentary (New Testament) Warran W.Wiersbe.

**"இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்"**
**(2 கொரி.6:2).** ●

---

## நற்செய்திப்பணி, ஒரு தொடர் ஓட்டம்

"ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரர்களை, முன்நிர்ணயித்த காலம் முடிந்ததும் அவர்களைப் புதைக்கிறார். ஆனால் அவர்கள் செய்த ஊழியம் புதைக்கப்படுவதில்லை. அப்பணி இன்னொருவரைக் கொண்டு தொடரும் ஒரு தொடர் ஓட்டம்" **- ஜாண் வெஸ்லி**

# கிறிஸ்தியானின் மோட்சப் பிரயாணம்

**பாகம் 10**

கிறிஸ்தியானின் மோட்சப் பிரயாணத்தின்போது வாயாடி (Talkative) என்பவன் கிறிஸ்தியானோடும் உண்மையானவனோடும் (faithful) வந்து சேர்ந்து கொண்டு பயணித்தான் . வாயாடி தன் சொந்த மூளையின் ஆற்றலைக் கொண்டு வேதத்தை அலசி ஆய்ந்து வாதிடுகிறான் என்பதையும் நடைமுறை வாழ்வில் அவன் ஒன்றுமில்லை என்பதையும் ஆண்டவருடைய வார்த்தையைக் கொண்டு விளங்கி கொண்டனர். தன் உண்மை நிலை என்ன என்பதை இருவரும் விளங்கிக் கொண்டனர் என்பதைப் புரிந்து கொண்ட வாயாடி அவர்களை விட்டு விலகிச் சென்று விட்டான். இதைக் குறித்து கடந்த இதழில் (ஏப்ரல் 2020) கண்டோம். கிறிஸ்தியானும் உண்மையானவனும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

## மீண்டும் நற்செய்தியாளர்

எதிர்பாராத நிலையில் வழியில் மீண்டும் நற்செய்தியாளரை (Evangelist) சந்தித்ததில் இருவருக்கும் பெரிய மகிழ்ச்சி. அவர்கள் கடந்து வந்த பாதையில் சந்தித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். நற்செய்தியாளர் அவர்களை விட்டுப் பிரியும்போது சில எச்சரிப்புகளைக் கொடுத்தார். இன்னும் எத்தனையோ சோதனைகள், உபத்திரவங்களை நீங்கள் சந்திக்க வேண்டியதிருக்கும். எனினும் இப்படிப்பட்ட அநேக உபத்திரவங்கள் மூலமாகத்தான் நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சென்றடைய முடியும் என்பதை எப்பொழுதும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். மேலும் இனி மேல் தான் நீங்கள் அதிக ஆபத்தான காரியங்களை எதிர் கொள்ளுவீர்கள். சற்றுத் தொலைவில் **மாயாபுரி எனும் பட்டணம்** (City of Vanity) இருக்கிறது. அந்தப் பட்டணத்தில் **மாயாபுரிச் சந்தை** (Vanity Fair) என்று ஓர் இடம் இருக்கிறது. அதைக் கடந்து தான் நீங்கள் தொடர்ந்து பயணிக்க வேண்டும் அது சத்துருக்களால் நிறைந்த பட்டணம். உங்களில் ஒருவரோ அல்லது இருவருமோ உங்களது சாட்சியைப் பகிர்ந்து உங்களது இரத்தத்தினால் அதை முத்திரையிட வேண்டிய கொடிய சோதனைகளை சந்திப்பீர்கள். வேறுவிதமாகச் சொன்னால் ''பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே'' என்று (எபி.12:4)ல் சொல்லப்பட்டிருப்பது போன்ற சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியதிருக்கும். ஆனாலும் மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் இராஜாதி இராஜாவிடமிருந்து ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுவீர்கள் என்று அறிவுரை கூறி நற்செய்தியாளர் விடைபெற்றுச் சென்றார்.

**மாயாபுரியும் மாயாபுரிச் சந்தையும்**

மாயாபுரியில் ஒரு சந்தை இருக்கிறது. அது ஆண்டு முழுவதும் திறந்தே இருக்கும். ஞானி சொன்னதுபோல அங்கு விற்கப்படும் அனைத்துமே மாயையானவைகளே. அங்கு எதை வாங்கினாலும் அது பாவமாகவே இருக்கும். ஆனால் அங்கு எல்லாம் கிடைக்கும். வீடுகள், நிலங்கள், பட்டங்கள், கவுரவப் பட்டங்கள், தேசங்கள், இராஜ்ஜியங்கள், பலவகையான இச்சைகள், சிற்றின்பங்கள், விபச்சாரிகள், கணவர்கள், மனைவிகள், வேலைக்காரர்கள், எஜமான்கள், பொன், வெள்ளி முத்துக்கள், விலையேறப்பெற்றக்கற்கள் மற்றும் இவைகள் தவிர பலவிதமான கேளிக்கைகள், விளையாட்டுகள், சூதாட்டங்கள், ஏமாற்று வேலைகள், ரவுடித்தனங்கள் யாவும் நிறைந்த இடம்தான் மாயாபுரிச் சந்தை.

மோட்சப் பட்டணத்தை நோக்கிப் பயணம் செய்யும் பயணிகள் இந்த மாயாபுரிச் சந்தையைக் கடந்துதான் செல்லவேண்டும். கிறிஸ்தியானும், உண்மையானவனும் இந்தப் பட்டணத்திற்குள் நுழைந்தார்கள். ஏனெனில் அவர்களுக்கு வேறு மாற்று வழியில்லை. நம்முடைய இராஜகுமாரனாகிய இயேசுகிறிஸ்து தாம் இப்பூமியில் வாழும் காலம் முடித்துச் செல்லும்போது இந்தப் பாதையின் வழியாகத்தான் சென்றார். மாயாபுரியின் இளவரசன் பெயல்செபூல் அவரை மாயாபுரிச் சந்தையிலுள்ள மாயையானவற்றை வாங்கும்படி வற்புறுத்தினான். ஆனால் நம்முடைய மிகப்பெரிய இராஜகுமாரன் மாயையானவற்றை வெறுத்து நிராகரித்துத் தள்ளி அவற்றால் தன்னைக் கறைபடாமல் காத்துக்கொண்டு மாயாபுரிச் சந்தையைக் கடந்து சென்றவர்.

கிறிஸ்தியானும் உண்மையானவனும் உள்ளே நுழைந்தவுடன் அங்கிருந்த அனைவரும் அவர்களை விநோதமாக உற்றுநோக்கினார்கள். ஏனென்றால் மாயாபுரிக்கே உரித்தான நவநாகரிக உடையை உடுத்தாமல் முற்றிலும் வித்தியாசமான பழைய பாரம்பரிய உடை அணிந்திருந்தார்கள். மாயாபுரியில் இப்படிப்பட்ட முட்டாள்கள் இருப்பார்களா என்பது போல அவர்களை அற்பமாகப் பார்த்து கேலி செய்தார்கள்.

இரண்டாவதாக அவர்களுடைய பேச்சு மாயாபுரி மக்கள் பேசுவதுபோல் அல்லாமல் முற்றிலும் வேறுபட்டிருந்தது. அவர்கள் பேசும் பாங்கு மற்றவர்களைப் பரிகாசம் செய்வது போன்றோ, அற்பமாகப் பேசுவது போன்றோ, இல்லாமல் கனப்படுத்தத்தக்கதாக இருந்தது. ஆனால் மாயாபுரி மக்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் மற்றவர்களைக் கேலி செய்வதாகவும், மற்றவர்களை எளிதில் கோபமூட்டும் கடுஞ்சொற்களாகவும், அவமானப்படுத்தும் சொற்களாகவும், இகழ்ச்சியான சொற்கள் நிறைந்ததாகவும் இருந்தன.

மூன்றாவதாக கிறிஸ்தியானும்

உண்மையானவனும் மாயாபுரிச் சந்தையில் நடந்து செல்லும்போது அங்குள்ள விற்பனையாளர்கள் அவர்களைக் கூவி அழைத்து “எங்கள் கடையில் வந்து பொருட்களை வாங்குங்கள்” என்று குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் மாயையான பொருட்களின் மீது தங்கள் கண்களைப் பதிக்காதிருக்க உள்ளத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டபடியால் விற்பனையாளர்கள் எழுப்பும் சத்தத்திற்குச் செவிகொடுக்காமல் நடந்து கொண்டேயிருந்தார்கள். ஆகவே அவர்கள் மாயைகளைக் கண்டுகொள்ளவில்லை. ஆகவே அவர்கள் மீது மாயாபுரிச் சந்தை விற்பனையாளர்களுக்கு கடுங்கோபமும் எரிச்சலுமுண்டாயிற்று.

விற்பனையாளர்கள் கூவிக்கூவிக் கேட்டும் எந்தப் பொருளையும் வாங்காமல் கண்டுகொள்ளாமலே சென்று கொண்டிருந்த அவர்களைப் பார்த்து “அப்படியானால் இந்த சந்தையில் என்னதான் வாங்கப் போகிறீர்கள்?” என்று சலிப்போடு கேட்டார்கள். அதற்கு கிறிஸ்தியானும் உண்மையானவனும் “நாங்கள் சத்தியத்தை மட்டுமே வாங்குவோம்” என்று உறுதியாகப் பதிலளித்தார்கள். இதைக் கேட்ட மாத்திரத்தில் அங்குள்ள வியாபாரிகளெல்லாம் மிகுந்த கோபத்தோடு அவர்களை சுற்றி வளைத்துக் கொண்டு “எங்கள் பொருட்களை ஏன் வாங்காமல் நிராகரிக்கிறீர்கள்?” என்று அவர்கள் கோபமூட்டும் அளவுக்குப் பேசினார்கள். அவர்கள் தேவபக்தியாக இருப்பது தீயசக்திகளுக்கு பிடிக்காததால் அவைகள் கொதித்தெழுந்து அவர்களை ஏதேனும் வார்த்தைகளில் சிக்கவைத்து சண்டைபிடிக்கத் திட்டமிட்டனர். நாங்கள் சத்தியத்தைத் தான் வாங்குவோம் என்றனர். அப்படியானால் இங்கு இருக்கும் வியாபாரப் பொருட்களெல்லாம் பொய்யா அல்லது மாயையா என்று வாதிட ஆரம்பித்தனர். அப்படிச் சொல்லுவதற்கு இவர்களுக்கென்ன தைரியம். அவர்கள் மீது அழுக்கையும், குப்பையையும் அள்ளி வீசினார்கள். இத்தனை அவதூறுகள் செய்தும் அவர்கள் ஒன்றும் எதிர்த்து பேசவில்லை. சாந்தமாகப் பதிலளித்தனர். இது மாயாபுரியாரை இன்னும் ஆத்திரம் மூட்டியது. இதனால் பெரும் அமளி ஏற்பட்டது. இதைக் கேட்ட சந்தையின் அதிபதி அவர்களைப் பிடித்து கட்டி இழுத்துக் கொண்டு வரும்படிச் சொன்னான். சந்தை மைதானத்திலிருக்கும் (Town Square) சந்தை அதிபதியிடம் கொண்டு சென்றார்கள். அவர்கள் இருவரையும் பலவந்தமாக இழுத்துக் அங்கே கொண்டு போய் நிறுத்தினார்கள். அவர்களை சாட்டையால் அடித்து விசாரிக்கும்படி கூண்டில் நிறுத்தப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் தங்களது வியாபார முறைமைகளுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள் என்று

உறுதியாக நம்பினார்கள். இவர்கள் நமது மாயாபுரிச் சந்தையை அற்ப மாகப் பேசி கலகத்தை உண்டாக் கியவர்கள். இவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று அநேகர் ஆவேசமாகப்பேசினார்கள். அப்பொழுது நற்செய்தியாளர்கள் சொன்ன காரியத்தை இருவரும் நினைவுகூர்ந்தார்கள். சிலர் இவர்கள் சாந்தமாகப் பேசு கிறார்கள். அவர்கள் வாயில் தகாத வார்த்தை எதுவும் வரவில்லையே என்றார்கள். அப்போதுள்ள சூழ் நிலையால் விசாரணையைத் தள்ளிவைத்து ஒரு தேதியைக் குறிப் பிட்டார்கள். அதுவரைக்கும் அவர்கள் கூண்டுக்குள்ளேயே அடைக்கப்பட்டார்கள்.

### நாம் கற்றுக் கொள்வது

மாயாபுரிச் சந்தையின் அனுப வங்களை நமது வாழ்வின் முக்கிய மான காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியம். இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாய் அல்லது அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்த வர்களாயிருந்தாலும் எளிதில் நாம் ஏமாற்றப்படும் சூழ்நிலைகள் அதிகம் இருக்கின்றன. அவற்றிலெல்லாம் சிக்கிக் கொள்ளாமல் தாண்டி வருவது கடினமான காரியம். நம்முடைய கண்ணோட்டம் எப்பொழுதும் மோட்சப் பட்டணத் திலேயே இருக்க வேண்டும். நாம் மோட்சப்பட்டணப் பயணியாக இருக் கிறோமா என்பதை உறுதி செய்து கொள்ள மூன்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

முதலாவது பரிசோதனை நாம் உடுத்தும் உடை எப்படியிருக்கிறது என்பதுதான். ஆலய வழிபாட்டிற்குச் செல்லும் போது உடுத்தும் உடைக்கும் மற்றைய நாட்களில் உடுத்தும் உடைகளுக்கும் பெரிய மாற்றமிருக் கிறதா என்பதை சிந்தித்துப் பாருங்கள். இதில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களின் உடை ஒழுக்கத்தில் கண்டிப் போடு நடந்து கொள்வதில்லை. மாறாக பெரும்பான்மையான பெற் றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விருப்பத்தோடு இசைந்து போய்விடு கின்றனர். இயேசு ஒருவேளை அவரிடம் வரும்படி என்னை அழைக் கிறார் என்று வைத்துக் கொள்ளு வோம். அப்பொழுது இயேசு விரும்பு கிற உடையைத்தான் நாம் அணி வோம். அதுவும் அவர் விரும்புகிற வண்ணமாகத்தான் (Way of dress-ing) அணிவோம். அப்படியானால் அந்த உடையையே நாம் எப்போதும் அணியத்தக்கதாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் எப்பொழுதும் நாம் அவரைப் பிரியப்படுத்துகிற வர்களாக இருக்க வேண்டும். அப்படி யானால்தான் நாம் மோட்சப் பயணிகள், இல்லாவிடில் நான் மாயா புரியின் நவநாகரிக உடைக்குப் பழக்கமாகி விடுவோம். இதில் கவனமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது பரிசோதனையாக நாம் எப்படிப் பேசுகிறோம் என்பதில் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இவைகள் மூன்று நூற் றாண்டுகளுக்கு முன்பு எழுதப் பட்டாலும் அது இன்றும் பொருத்த

மானதே. "என்னுடைய பேச்சு எப்படி இருக்கிறது?" நான் பேசும் வார்த்தைகளில் பாவமில்லாம லிருக்கிறதா? நம்முடைய அன்றாட உரையாடலில் கடுஞ்சொற்கள், இகழ்ச்சியான சொற்கள் இல்லா திருக்கின்றனவா? நம்முடைய வீடு களில் நம்முடைய பெற்றோர், நம்முடைய ஆலயத்தில் சகவிசு வாசிகள் இவர்களின் பேச்சு தெய்வீகமும், பக்திவிருத்திக்கு ஏற்றதாகவும் இருக்கின்றனவா? அப்படியானால் நாம் பேசும் மொழி பரலோக மொழியாக இருக்கும். தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்கிறவர்களாயிருக்க வேண்டும். பிறரைப் புண்படுத்தும் வார்த்தைகள் நம் வாயில் வரக் கூடாது. நம்மை மிகுதியும் கோப மூட்டும்போது நம்முடைய பதி லுரை சரியாக இருக்கிறதா?

மூன்றாவதாக, நாம் கண்களின் இச்சைக்கு இரையாகிவிடாமல் நம்மைக் காத்துக் கொள்ளு கிறோமா? கிறிஸ்தியான், உண்மை யானவன் இவர்களின் பதிலைப் பாருங்கள். "நாங்கள் சத்தியத் தையே வாங்க விரும்புகிறோம்" எத்தனை முறை கேட்டாலும் அதுவே அவர்களுடைய பதிலாக இருந்தது. ஏன் அதில் அவ்வளவு வைராக்கியமாயிருந்தார்கள்? ஏனெனில் அதுவே தேவனையும், தேவனுடைய இராஜ்ஜியத்தையும் மகிமைப்படுத்துவதாக இருக்கும். நுகர்வோரின் நாகரிகம் (Culture of Consumerism) இந்த நாட்களில் மாறுபட்டதாக இருக்கிறது. கண் களுக்கு இனிமையாகத் தோன்றும் எல்லாவற்றையும் வாங்குகிறார்கள். அது இன்றியமையாத தேவைதானா என்பதை சிந்தியாமலிருக்கிறார்கள். கொரோனா வைரஸ்ஸால் வீட்டோடு அடைபட்டிருந்தாலும் வாய்ப்பு கிடைக்கும்போது அவர்களில் எந்த மாற்றமும் ஏற்படுகிறதில்லை. வய தான முதியோர் அத்தியாவசிய தேவையிலிருந்தாலும் அதைப்பற்றிய சிந்தனையற்றவர்களாயிருக்கிறோம்.

அதுமாத்திரமல்ல நம்முடைய பணத்தை எப்படிச் செலவிடுகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிறுமைப்பட்டோர், ஏழ்மையிலிருப் போர் இவர்களை நினைத்துப் பார்க் கிறோமா? கொரோனா வைரஸ் காரணமாக வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் காலத்தில் சில பிரபல்யங்கள் விதவிதமாக சிற்றுண்டி, மற்றும் உணவுப்பொருட்கள் செய்து சுவைத்து உண்டு பொழுதைக் களிப்பதாக ஊடகங்களில் பகிர்ந்து கொள்ளு கிறார்கள். ஒருவேளை சாப்பாட்டிற்கு ஏங்கித் தவிப்போரை சிந்திக்கிறோமா? வேதம் சொல்லுகிறது "அழுகிறவர் களோடே அழுங்கள்" (ரோம.12:15). நம்முடைய பார்வை மோட்சப் பட்டணத்தில் பதிந்திருக்கிறதா அல்லது மாயாபுரியில் பதிந்திருக்கிறதா? சிந்திப் போம், சீர்ப்படுத்திக் கொள்ளுவோம்.

- தொடரும்

நன்றி: **சகோதரி. லாரா டெலனோ**
lauradelano@yahoo.com

# சமாதான சிந்தையே ஆரோக்கியமான சிந்தை

இந்த உலகத்தில் நாம் அனைவரும் எதை நாடி ஓடிக்கொண்டிருக்கிறோம்? சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தானே? இந்த சமாதானத்தை அனுபவிக்க முடியாமல் நம்மைத் தடைசெய்கிறது எது? பயம், கோபம் பழிக்குப்பழி வாங்குதல், மன்னிக்க முடியாத தன்மைகள், மற்றும் குற்ற உணர்வுகள் தானே. இவைகளெல்லாம் ஏன்? இப்படிப்பட்ட பிரச்சனைகள் வாதிப்பதினாலும், மன்னிக்க மறக்க முடியாத தன்மையினாலும் எத்தனை இரவுகளை தூக்கமில்லாமல் கழித்திருப்போம்?

அநேகரை உங்களால் மன்னிக்க முடிவதில்லை. நீங்கள் யார் மீது நம்பிக்கையாக இருந்தீர்களோ அவர் உங்களை ஏமாற்றிவிட்டார். உங்கள் பணத்தை அல்லது சொத்தை அபகரித்து மிகப் பெரிய நஷ்டத்தை உண்டாக்கி விட்டார். நீங்கள் நம்பியிருந்த உங்களுக்கு மிகவும் வேண்டியவரோ அல்லது உறவினரோ, உங்களை சரீரப் பிரகாரமாகக் காயப்படுத்தி விட்டார். ஒருவர் பொய்யான சில வதந்திகளைக் கிளப்பிவிட்டு உங்களுக்கிருந்த நல்ல செல்வாக்கை அழிக்கும் அளவுக்குச் செயல்பட்டுவிட்டார்.

என் வாழ்க்கையே சீரழிந்து போய்விட்டது. நான் எப்படி இதை மன்னிக்க முடியும்? என்று நீங்கள் அழுகிறீர்கள். நாம் அனைவரும் சிறைக் கைதிகளாக, நாமே உண்டாக்கிக் கொண்ட பிரச்சனைகளுக்குள் அதாவது மன்னிக்க முடியாத சுபாவத்தினால் அதனால் ஏற்பட்ட கசப்பான உணர்வுகளிலும் சிக்கி நான்கு சுவர்களுக்கு மத்தியில் முடங்கிக் கிடக்கிறோம்.

இதிலிருந்து தப்பிக்க வழியே இல்லையா? இருக்கிறது! ஒரு திறவுகோல் இருக்கிறது. அதைக்கொண்டு நாம் அடைந்துகொள்ள முடியாது என்று எண்ணியே, மெய்யான விடுதலையையும், சமாதானத்தையும், மகிழ்ச்சி யையும் பெற்றுக் கொள்ள முடியும். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்க முடியும் என்பதை அவர் தம்முடைய வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டி முன்மாதிரியாக நமக்கு அதை கற்றுத்தந்தார் என்றால் அதுதான் அந்தத் திறவுகோல் என்பதில் எந்த ஐயமுமில்லை. கொடிய வேதனையின் மத்தியில் சிலுவையில் தொங்கிக் கொண்டு, தனது கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி கொண்டிருந்த வேளையிலும் **“பிதாவே இவர்களை மன்னியும்” என்று இயேசு ஜெபித்தாரே அதுதான் அவர் ஜெபித்த ஜெபங்களிலெல்லாம் மிகவும் வல்லமையான ஜெபம்.**

நம்முடைய பகுதியிலும் எந்தவித நிபந்தனையுமின்றி மன்னிப்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து நமது இருதயத்தில் ஏற்பட்ட காயங் களை மாற்றுவதற்கு மன்னிப்பதே முதல்படி. அவ்வாறு நாம் மற்றவர்களை

.com

மன்னித்து ஒப்புரவாகும்போது நம்முடைய உறவுகளில் நல்ல மாற்றம் ஏற்படுவது மாத்திரமல்ல, நாம் மன்னித்தவரை நேசிக்கவும் ஆரம்பித்து விடுகிறோம். ஆண்டவராகிய இயேசு நமக்குக் கற்றுத்தந்த ஜெபத்தில் **"எங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தவர்களை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்"** என்று சொல்லப் பட்டதை அறிந்திருக்கிறோம். நாம் மற்றவர்களை மன்னித்தால்தான் ஆண்டவர் நம்மை மன்னிப்பார் என்பதை எதிர்பார்க்க முடியும். நாம் மன்னித் தலின் அனுபவத்தைப் பெற்று அனுபவித்தால்தான் மெய்யான மனச்சமா தானம் கிடைக்கும். நாம் மேற்குறிப்பிட்ட ஜெபத்தை உண்மையாகவே நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து ஏறெடுப்போமா? அதுவே நமது வாழ்க்கையின் மேன்மையான காரியமாக இருக்கமுடியும். ஆண்டவரால் வடிவமைக்கப்பட்ட இந்தத் திறவுகோலை கொண்டு தான் நம்முடைய வாழ்க்கையின் மிகப்பெரிய பிரச்சனைகளையும் தீர்க்கமுடியும்.

முதலாவதாக நீங்கள் யாராரிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று தீர்மானிக்கிறீர்களோ அவர்களுடைய பெயர்களைக் குறிப்பெடுங்கள். அந்தப் பெயர்களைப் படியுங்கள். படிக்கும்போது **"இயேசுவே, இவரை நான் மன்னிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிறேன்" என்று ஒவ்வொரு வராகச் சொல்லி ஜெபியுங்கள்.** அவர்களுக்கு உங்களது தவறான செயல் களினால் ஏற்பட்டிருக்கும் மனவேதனைகளை சிந்தித்துப் பாருங்கள். அப்பொழுது நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்களோ அவர்கள் மீது உங்களுக் குள்ள கசப்பு மாறி உங்கள் இருதயத்தில் சமாதானம் வந்து தங்குவதை உணருவீர்கள். அப்பொழுது ஆண்டவர் உங்களை மன்னிக்கிறார் என்ப தையும் உணருவீர்கள்.

இந்த அனுபவங்களைப் பெற்றபின் அடுத்த செயல்பாட்டிற்குச் செல்லுங்கள். முதலாவதாக உங்களது வீட்டாரிலிருந்து ஆரம்பியுங்கள். அடுத்து உங்களது உறவினர்கள், அயலகத்தார், அலுவலகத்தில் உங்களோடு பணியாற்று கிறவர்கள் இப்படியாக மன்னிப்பு கேட்பதை விசாலப்படுத்துங்கள். அவ்வாறு நீங்கள் மன்னிப்பு கேட்கும் போது அவர்கள் ஒருவேளை உங்களை கோபமூட்டுமளவு பேசினாலும் நீங்கள் பொறுமையை இழக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த வித வாதத்திற்கும் இடங்கொடுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். பதிலுக்கு பதில் பேசாதிருங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியான முகத்தோடும் புன்முறுவலோடும் இருங்கள்.

இது மனிதனால் சாத்தியமாகுமா என்று ஒருவேளை நீங்கள் நினைக் கக்கூடும். அப்படிப்பட்ட சிந்தனைகள் வரும்போது இயேசு தம்மை அவமா னப்படுத்தியவர்களையும், காயப்படுத்தியவர்களையும், முகத்தில் துப்பியவர்

களையும் பதிலுக்குப் பதில் செய்ய நினைக்காமல் அவர்களை எல்லாம் மனப்பூர்வமாக மன்னித்தாரே என்பதை உங்கள் சிந்தனைக்குக் கொண்டு வாருங்கள். அப்பொழுது அவருடைய சுபாவத்தை நாம் பெற்றுக்கொள்ள அது ஏதுவாக அமையும். ஆண்டவரோடு குறிப்பாக அதிகாலை வேளையில் அமர்ந் திருக்கும் நேரத்தைத் (Quiet time) தெரிந்துகொண்டு அதைத் தவறாமல் செய்யுங்கள். ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்திருந்து வேதத்தை வாசித்து தியானியுங்கள். கற்றுக்கொண்ட காரியத்தை உங்கள் வாழ்வில் நடைமுறைப் படுத்த தீர்மானியுங்கள். செயல்படுத்துங்கள். ஜெபவேளை, நீங்கள் தேவனோடு பேசும் வேளை. அவர் உங்களுக்குச் செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லுங்கள். உங்கள் பிரச்சனைகளை அவருடைய சமுகத்தில் வையுங்கள். அவருடைய ஆலோசனைக்குக் காத்திருங்கள். அவர் எப்போதும் உங்களோடு இருக்க வேண்டுமென்று விரும்புங்கள். அப்பொழுது நமக்கு எந்த மன அழுத் தமும் இல்லாது உங்களைக் காத்துக் கொள்வார். "பிதாவே எங்களுக்கு விரோத மாகப் பாவஞ்செய்தவர்களை மன்னியும்" என்று ஜெபிக்கும் ஜெபம் உண்மை யிலேயே நீங்கள் பூலோகத்திலிருக்கும் போதே பரலோக சமாதானத்தைக் கொண்டுவரும்.

- நன்றி: சகோ.கிறிஸ்டினா ஜோசப், Light of Life - Feb 2020 ●

## மன்னிக்கும் கிருபை

ஜோசப் பார்க்கர், உலக பிரசித்திப் பெற்ற ஒரு குத்துச்சண்டை வீரர். இங்கிலாந்தில் கிரீன் டவுண் என்ற சுரங்கப் பகுதியில் இயேசுவை விசுவாசிக் காத தொழிலாளர்கள் மத்தியில் குறிப்பாக கடவுளே இல்லை என்று சொல்லு கிற நாத்திகர் மத்தியில் தைரியமாக இயேசுகிறிஸ்துவை அறிவித்து வந்தார்.

ஒருநாள் ஒரு நாத்திகர், ஜோசப் பார்க்கரை பலர் முன்னிலையில் அவமானப்படும் அளவுக்கு கடுமையாகத் திட்டிவிட்டார். அதைத் தொடர்ந்து "ஸ்தேவான் கொல்லப்படும் அளவுக்கு கல்லெறிந்த போது இயேசு என்ன செய்துகொண்டிருந்தார்?" என்ற ஒரு கேள்வியை வைத்தார். பார்க்கர் சற்று யோசித்து "ஸ்தேவான், தன்னைக் கல்லெறிகிறவர்களுக்காக ஜெபிக்கும்படி கிருபை கொடுத்தார். ஸ்தேவானுக்கு கிறிஸ்துவின் சிந்தை இருந்தபடியால் ஜெபிக்கும் கிருபையைப் பெற்றுக் கொண்டு அந்தச் சூழ்நிலையிலும் இயேசு வின் ஜெபத்தை நினைவுகூர்ந்தான். உடனே "பிதாவே, அவர்களை மன்னியும்" என்று மிகுந்த தைரியமாக ஜெபம் பண்ணினான். மரண வேளையிலும் தன்னைக் கல்லெறிந்தவர்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொடுத்தானே" என்றார்.

நன்றி: இணையத்தளச் செய்தி ●

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 08025 461144.

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805

e-mail to : wocmdu@gmail.com